ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாமுனிகள் சிஷ்யரான கோயில் கந்தாடையண்ணன் திருக்குமாரரான கந்தாடை நாயன் அருளிய

பெரிய திருமுடி யடைவு

அநந்தகோடி ப்ரஹ்மாண்ட நாயகனாய், ஆதிமத்யாந்த ஶூந்யனாய், ஸமாநாதிகரஹிதனாய், வேதாந்த வேத்யனாய், அவாப்தஸமஸ்தகாமனாய், அநந்த கல்யாண குணங்களுடையனாயிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் உகந்தருளியிருக்கிற ஸ்தலங்கள் :—பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என்று ஐந்து.

அதில் பரமாவது— அநந்தகோடி ப்ரஹ்மாண்டங்களுக்கும் புறம்பாய், விரஜைக்கப்புறமாய், பரிணாமாதி ரஹிதமாய், "குண்டோ நாஸ்தீதி வைகுண்ட:" என்று சொல்லுகிறபடியே நாஶரஹிதமாய், நாநாரத்ன ஸ்வர்ண மயமாய், அநந்த விவித விசித்ர கோபுரமண்டப ப்ராஸாதாதி பரிஶோபிதமாய், நிரதிஶயானந்த ஸுகாவஹமாய், பஞ்சோபநிஷண்மயமாய், ஸகலவஸ்து பரிபூரிதமாய், ஸகல ஸாம்ராஜ்ய லக்ஷ்மீகரமான ஸ்ரீ வைகுண்டமென்கிற பரமபதத்தில், லக்ஷ்மீபூமிநீளாநாயகனாய், அநந்த கருட விஷ்வக்ஸேனாதி நித்யமுக்தஸஹிதனாய், 1. 'ஸ்புரத்கிரீடாங்கத ஹாரகண்டிகா' என்றும், 2. "ஸ்வோசிதவிவித விசித்ராநந்தாஶ்சர்ய" என்றும் சொல்லுகிறபடியே திவ்யாம்பர, திவ்யாபரண, திவ்யமால்ய, திவ்யாயுதாதி ஸர்வாலங்கார பூஷிதனாய், அநந்தகோடி ஸூர்யப்ரகாஶனாயெழுந்தருளியிருக்கிறது.

வ்யூஹமாவது :— திருப்பாற்கடலிலே ப்ரஹ்மருத்ர தேவேந்த்ராதி தேவதைகளுக்கு ஸேவ்யனாய், அநந்தாவதாரங்களுக்கும் முதலாய், உத்பத்தி ஸ்திதிலயங்களுக்குக் கர்த்தாவாயெழுந்தருளியிருக்கிறது.

acharya.org

விப₄வமாவது :—3. 'பரித்ராணாய ஸாதூ₄நாம்'' என்கிற படியே து₃ஷ்ட நிக்₃ரஹ ஶிஷ்டபரிபாலன த₄ர்ம ஸம்ஸ்தா₂பநாதி₃கள் பண்ணக் கடவதான ராமக்ருஷ்ணாத்₃யவதாரங்கள்.

அந்தர்யாமியாவது :— 4. ''அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:'' என்றும், 5 ''அந்தர்ப₃ஹிஸ் ஸகலவஸ்துஷு ஸந்தமீஶம்'' என்றும் சொல்லுகிறபடியே வ்யாப்யவ்யாபகனாய்; ஆப்₃ரஹ்ம பிபீலிகாதி₃ ஸகல சேதநாசேதனங்களுக்கும் அந்தர்யாமியாய், ஸர்வக₃தனாய், பரிபூர்ணனாயெழுந்தருளியிருக்கிறது.

அர்ச்சாவதாரமாவது:-ஸர்வஸுலப₄மாய், சேதனர்க்கு அபி₄மதமான த்₃ரவ்யத்திலே விக்₃ரஹமாய், ஸகலஜன மோஹனமாய், கோயில்களிலும், க்₃ருஹாதி₃களிலுமெழுந்தருளியிருக்கிறது.

அதில் ஆழ்வார் பாடின திருப்பதிகள் நூற்றெட்டு; அதில் முக்₂யமான திருப்பதிகள்:— 6. ''ஶ்ரீரங்க₃மங்க₃ளமணிம் கருணா நிவாஸம் ஶ்ரீவேங்கடாத்₃ரிஶிக₂ராலய காளமேக₄ம் | ஶ்ரீ ஹஸ்திஶைலஶிக₂ரோஜ்ஜ்வலபாரிஜாதம் ஶ்ரீஶம் நமாமி ஶிரஸா யது₃ஶைலதீ₃பம் || '' என்று சொல்லுகிறபடியே புஷ்ப த்யாக₃ போ₄க₃ ஜ்ஞான மண்டபங்கள்.

அதிலும் ப்ரதா₄னமானது ஸாக்ஷாத் பரமபத₃மான நம்பெருமாள்கோயில். எங்ஙனே என்னில் :— 7. ''காவேரீ விரஜா ஸேயம் வைகுண்ட₂ம் ரங்க₃மந்திரம் | ஸ வாஸுதே₃வோ ரங்கே₃ஶ: ப்ரத்யக்ஷம் பரமம் பத₃ம் || '' என்று சொல்லுகிறபடியே. இப்படி ஸாக்ஷாத் பரமபத₃மான நம்பெருமாள் கோயிலுக்கு ராஜாவானவர் பரமபத₃ராஜர், ஶ்ரீரங்க₃ராஜர். இப்படி ஶ்ரீரங்க₃ராஜரான பெரியபெருமாளுக்குத் திருநக்ஷத்ரம் பங்குனியில் ரேவதி; திருநாமங்கள் ஶ்ரீரங்க₃ராஜர் நம்பெருமாள், அழகியமணவாளப்பெருமாள், முன்னிலும் பின்னழகிய பெருமாள். ஆப₄ரணத்துக்கு அழகு கொடுக்கும் பெருமாள், வந்தவழிவாராத பெருமாள், மந்தாரங்கண்டு மறையும் பெருமாள், தேவசிகாமணிப்பெருமாள்; சிஷ்யைகள் ஶ்ரீ பூ₄மி நீளாதி₃களான நாச்சிமார்கள்.

acharya.org

தனியன்

8. ஸக்ஷ்மீகல்யாணதோத்துங்கரஸ்தநந்தாயகாந்தயா: |
ஸ்ரீரங்கராஜ பத்துங்கேர்வ ராமாதய மாதுலாய்த்ருஜே ||

பெரிய பிராட்டியாரான ஸ்ரீரங்கநாச்சியாருக்குத் திருநக்ஷத்ரம் பங்குனியில் உத்ரம்; திருநாமங்கள் நாச்சியார், பெருமாள்நாச்சியார், ஸ்ரீரங்கநாச்சியார், பெரியபிராட்டியார். இவர்க்காசார்யரும் திருவாராதனமும் பெரிய பெருமாள்; சிஷ்யர்கள் அநந்தகருடவிஷ்வக்ஸேநாதிகளான நித்யமுக்தர்கள்.

தனியன்

9. நம: ஸ்ரீரங்கநாயக்யை யத்ப்ரூவிப்ரம பேததः |
ஈஸேஶிதவ்ய வைஷம்ய நிம்நோந்நதமிதம் ஜகத் ||

ஸேனைமுதலியாருக்குத் திருநக்ஷத்ரம் ஐப்பசி மாஸத்தில் பூராடம்; திருநாமங்கள் ஸேனைமுதலியார், ஸேனாதிபதி, ஸேநேஶர், விஷ்வக்ஸேனர், ஸூத்ரவதீஶன், வேத்ரதரர், வேத்ரஹஸ்தர்; தேவியார் ஸூத்ரவதி; திருவாராதனம் பெரியபெருமாள்; ஆசார்யை பெரியபிராட்டியார்; சிஷ்யர்கள் ஆழ்வார்கள் பதின்மரும்; இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் விஷ்வக்ஸேன ஸம்ஹிதை முதலானவை.

இவருக்குத் தனியன்

10. ஸ்ரீரங்க சந்த்ரமஸமிந்திரயா விஹர்த்தும்
விந்யஸ்ய விஶ்வசிதசிந்நயநாதிகாரம் |
யோ நிர்வஹத்யநிஶமங்குளிமுத்ரயைவ
ஸேநாந்யமந்ய விமுகாஸ் தமஶிஶ்ரியாம ||

ஶங்காம்ஶபூதரான பொய்கையாழ்வாருக்குத் திருவவதார ஸ்தலம் தொண்டைமண்டலத்திலே பெருமாள் கோவில். அவதாரம் பொற்றாமரைப் பொய்கையில் தாமரைப் பூவிலே. திருநக்ஷத்ரம் த்வாபரயுகம் எட்டுலக்ஷத் தறுபதினாயிரத்துத் தொள்ளாயிரம் ஸம்வத்ஸரமான ஸித்தார்த்தி ஸம்வத்ஸரத்தில் ஐப்பசி மாஸம் ஶுக்ல அஷ்டமி செவ்வாய்க்கிழமை திருவோணம்; திருநாமங்கள் காஸாரயோகி, ஸரோமுநீந்த்ரர், பொய்கையார்; திருவா

acharya.org

ராதனம் ஆழ்வார்கள் நாயனார். ஆசார்யர் ஸேனைமுதலியார். இவர் பாடின திருப்பதிகள் கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருக்கோவலூர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் 'வையந்தகளியா' என்கிற முதல் திருவந்தாதி நூறு பாட்டு.

இவர்க்குத் தனியன்

11. காஞ்ச்யாம் ஸரஸி ஹேமாப்ஜே ஜாதம் காஸார யோகிநம் |
கலயே ய: ச்ரிய: பதிம் ரவிம் தீபமகல்பயத் ||

கதாம்சபூதரான பூதத்தாழ்வாருக்குத் திருவவதார ஸ்தலம் தொண்டைமண்டலத்திலே ஸமுத்ரக்கரையில் திருக்கடல்மல்லை. அவதாரம் குருக்கத்திப்பூவிலே. திருநக்ஷத்ரம் மேற்படி பொய்கையாருக்கு மற்றைநாள் நவமி புதன்கிழமை அவிட்டம். திருநாமங்கள் பூதாஹ்வயர், பூதத்தார், மல்லாபுரவராதீசர். திருவாராதனம் ஆழ்வார்கள் நாயனார். ஆசார்யர் ஸேனைமுதலியார். இவர் பாடின திருப்பதிகள் கோயில், திருமலை, திருக்கடன்மல்லை, திருக்கோவலூர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் 'அன்பே தகளி' என்கிற இரண்டாந்திருவந்தாதி நூறு பாட்டு.

இவர்க்குத் தனியன்

12. மல்லாபுர வராதீசம் மாதவீ குஸுமோத்பவம் |
பூதம் நமாமி யோ விஷ்ணோர் ஜ்ஞாநதீபமகல்பயத் ||

நந்தகாம்சபூதரான பேயாழ்வாருக்குத் திருவவதார ஸ்தலம் தொண்டைமண்டலத்திலே ஸமுத்ரக்கரையில் மயூரபுரம்; அவதாரம் மணிகைரவமென்கிற கிணற்றில் செவ்வல்லிப்பூவிலே; திருநக்ஷத்ரம் மேற்படி பூதத்தாருக்கு மற்றைநாள் தசமி வியாழக்கிழமை சதயம். திருநாமங்கள் மஹதாஹ்வயர், பேயாழ்வார், மயிலாபுராதிபர். திருவாராதனம் ஆழ்வார்கள் நாயனார். ஆசார்யர் ஸேனைமுதலியார்; சிஷ்யர் திருமழிசையாழ்வார். இவர் பாடின திருப்பதிகள் கோயில், திருமலை, திருவல்லிக்கேணி, திருக்கோவலூர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் 'திருக்கண்டேன்' என்கிற மூன்றாம் திருவந்தாதி நூறு பாட்டு.

acharya.org

இவர்க்குத் தனியன்

13. த்₃ருஷ்ட்வா து₃ஷ்டாவ யோ விஷ்ணும் ரமயா மயிலாதி₄பம் ।
கூபே ரக்தோத்பலே ஜாதம் மஹதா₃ஹ்வயமாச்ரயே ॥

இந்த முதலாழ்வார்கள் மூவரும் அயோநிஸம்ப₄வராய்க் கூடிக்கொண்டு யோக₃மஹத்த்வத்தினால் மூவாயிரத்து நூற்றிருபத்தஞ்சு ஸம்வத்ஸரம் பூ₄மிஸஞ்சாரம் பண்ணிக் கொண்டிருந்து திருக்கோவலூரிலே திருநாட்டுக்கு எழுந்தருளினார்கள்.

ஸு₂தர்சநாம்சபூ₄தரான திருமழிசையாழ்வார்க்குத் திருவவதாரஸ்த₂லம் தொண்டைமண்ட₃லத்திலே திருமழிசை. திருநக்ஷத்ரம் விப₄வஸம்வத்ஸரம் தை₂மாஸம் க்ருஷ்ண பக்ஷத்தில் தசமி வியாழக்கிழமை மகநக்ஷத்ரம்; துலா லக்னம். திருத்தகப்பனார் ப₄ார்க்க₃வ ரிஷி. திருத்தாயார் கனகாங்கியம்மாள். வளர்த்தவன் ஹரிதா₃ஸன். திருநாமங்கள் ஸ்ரீப₄க்திஸாரர், மஹீஸாரபுராதீ₄சர், ப₄ார்க்க₃வாத்மஜர், திருமழிசையார், மழிசைப்பிரான், வித்₃யை அஷ்டாங்க₃யோக₃ம். திருவாராத₄னம் சொன்னவண்ணஞ் செய்த பெருமாள். ஆசார்யர் ஸேனைமுதலியார். புருஷகாரர் பேயாழ்வார். சிஷ்யர் கணிகண்ணன், த்₃ருட₄வ்ரதன். இவர் அருளிச்செய்த ப்ரப₃ந்த₄ங்கள் நான்முகன் திருவந்தாதி தொண்ணூற்றாறு பாட்டு, திருச்சந்த விருத்தம் நூற்றிருபது பாட்டு. இவர் பாடின திருப்பதிகள் நம்பெருமாள் கோயில், திருமலை, திருக்குடந்தை, திருப்பேர், அன்பில், கவித்தலம், திருவூரகம், திருப்பாடகம், சொன்ன வண்ணஞ்செய்த பெருமாள் திருவெஃகா. இவர் யோக₃ வித்₃யையினாலே, இரண்டாயிரத்து முந்நூறு ஸம்வத்ஸரம் பூ₄மிஸஞ்சாரம் பண்ணிப் பரமதநிரஸன பூர்வகமாக ஸ்வ மதஸ்தா₂பனம் பண்ணினார்.

இவர் தனியன்

14. சக்திபஞ்சமய விக்₃ரஹாத்மநே
சு₂க்திஹார ஜிதசித்தஹாரிணே ।
முக்திதா₃யகமுராரிபாத₃யோர்
ப₄க்திஸாரமுநயே நமோ நம: ॥

acharya.org

ஸேநேஶாம்ஶபூதரான நம்மாழ்வாருக்குத் திருவவதார ஸ்தலம் பாண்டியதேஶத்திலே திருத்தாம்ரபர்ணீ தீரத்தில் திருக்குருகூர். திருநக்ஷத்ரம் கலியுகாதியில் ப்ரமாதி வருஷம் நாற்பத்துமூன்றுநாள் வைகாசி மாஸம் பன்னிரண்டாம் தேதி வெள்ளிக்கிழமை சுக்லபக்ஷ சதுர்த்தசி விசாக நக்ஷத்ரம்; கர்க்கடகலக்னம். திருவவதாரம் சதுர்த்த வர்ணத்திலே, திருக்குறுங்குடி நம்பி வரப்ரஸாதத்தாலே; திருத்தாயார் உடையநங்கையார். திருத்தகப்பனார் காரியார். அவர் திருத்தகப்பனார் செந்தாமரைக்கண்ணன். அவர் திருத்தகப்பனார் அச்சுதர். அவர் திருத்தகப்பனார் அறந்தாங்கியார் அவர் திருத்தகப்பனார் திருவழுதிவள நாடர். இது நம்மாழ்வாருடைய திருவம்ஶம். இவருக்கு இருப்பிடம் திருப்புளியாழ்வாரடி. திருநாமங்கள் காரிமாறன், மாறன், சடகோபன், பராங்குஶன், நம்மாழ்வார், வேதம் தமிழ்செய்த பெருமாள். திருவாய்மொழிப்பெருமாள், உதயபாஸ்கரர், திருநாவீறுடையபிரான், குருகேஶர், குருகைப்பிரான், திருக்குருகூர்நம்பி, தென்னரங்கன் பொன்னடி, வகுளாபரணர், அருள்மாறன்; இவருக்குத் திருமுடி ஸ்தானம் நம்பெருமாள். திருக்கை திருத்தோள் திரு மேனி ஸ்தானங்கள் ஆழ்வார்கள் திருக்கடி ஜகந்நோரு ஜங்காஸ்தானங்கள் நாதயாமுநாதி பூர்வாசார்யர்கள். திருவாராதனம் பொலிந்து நின்ற பிரான்' ஆசார்யர் ஸேனைமுதலியார். சிஷ்யர் மதுரகவியாழ்வாரும் ஸ்ரீமந் நாதமுனிகளும் முதலானவர்கள். இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் திருவிருத்தம் நூறுபாட்டும், திருவாசிரியம் ஏழுபாட்டும், பெரியதிருவந்தாதி எண்பத்தெழுபாட்டும், திருவாய்மொழி ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும். இவர் பாடின திருப்பதிகள் அழகர்மலை, வடதிருமலை, அக்காரக்கனி, திருக்குருகூர், திருக்குறுங்குடி, வானமாமலை, திருக்குடந்தை, திருவல்லவாழ், திருவண்வண்டூர், திருவிண்ணகர், திருத்தொலைவில்லிமங்கலம், திருக்கோளூர், நம்பெருமாள்கோயில், தென்திருப்பேர், திருவாறன்விளை, தென்குடந்தை, திருவண்பரிசாரம், திருச்செங்குன்றூர், திருக்கடித்தானம், குட்டநாட்டுத் திருப்புலியூர், திருப்புளிங்

acharya.org

குடி வரகுணமங்கை ஸ்ரீவைகுண்டம், திருக்காட்கரை, திருமூழிக்களம், திருநாவாய், திருக்கண்ணபுரம், திருமோகூர், திருவனந்தபுரம், திருவாட்டாறு. இவர் முப்பத்தைந்து திருநக்ஷத்ரமெழுந்தருளியிருந்தார்.

இவர்க்குத் தனியன்

15. மாதா பிதா யுவதயஸ் தநயா விபூ4திஸ்
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர் வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥

கௌஸ்துபா4ம்ஶபூ4தரான குலஶேக2ராழ்வாருக்குத் திருவவதாரஸ்த2லம் சோழதே3ஶத்தில் திருவஞ்சிக்களம். திருநக்ஷத்ரம் பராப4வ வருஷம் மாசி மாஸம் ஶுக்லபக்ஷத்தில் த3ஶமி வியாழக்கிழமை புனர்பூசம். திருத்தகப்பனார் க்ஷத்ரியோத்தமரான த்3ருட4வ்ரத மஹாராஜர்; திருத்தமயனார் சேரன். திருநாமங்கள் குலசேகரப்பெருமாள், குலசேகராழ்வார், கொல்லிகாவலன், சேரலர்கோன், குக்குடபுராதீ4ஶர். ஆசார்யர் ஸேனை முதலியார். திருவாராத4னம் மன்னனார். பக்தி-அவதாரங்களில் சக்ரவர்த்தித் திருமகனார் திருவடிகளிலும், அர்ச்சாவதாரங்களில் திருவேங்கடமுடையான் திருவடிகளிலும். இவர் அநுதி3னமும் ஸ்ரீவைஷ்ணவரோடே காலக்ஷேபம் பண்ணுகிறதும், ஸ்ரீமத்3ராமாயண வ்யாக்2யானம் கேட்கிறதும், ப்ரதிதி3னமும் ஸ்ரீரங்க3யாத்ரை பண்ணுகிறதும், இப்படி ப4க3வத் பா4க3வதாசார்ய கைங்கர்ய பரராயிருப்பார். இவரருளிச்செய்த ப்ரப3ந்த4ங்கள், முகுந்த3மாலை என்கிற ஸ்தோத்ரமும், பெருமாள்திருமொழி நூற்றைந்துபாட்டும். இவர் பாடின திருப்பதிகள் கோயில், திருமலை, அழகர்திருமலை, அயோத்தி, வித்துவக்கோடு, வண்புருடோத்தமம், திருக்கண்ணபுரம், திருச்சித்திரகூடம்.

இவருக்குத் தனியன்

16 கு4ஷ்யதே யஸ்ய நக3ரே ரங்க3யாத்ரா தி3நே தி3நே ।
தமஹம் ஶிரஸா வந்தே3 ராஜாநம் குலஶேக2ரம் ॥

இவர் அறுபத்தேழு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். ப்3ரஹ்மதே3ஶம் மன்னார்கோயிலிலே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

acharya.org

வைனதேயாம்ஶபூதரான பெரியாழ்வார் அவதாரஸ்தலம் பாண்டியமண்டலத்திலே ஸ்ரீவில்லிபுத்தூர். திருநக்ஷத்ரம் க்ரோதன வருஷம் ஆனி மாஸம் ஶுக்லபக்ஷத்தில் ஏகாதஶி பாநுவாரம் ஸ்வாதிநக்ஷத்ரம். திருத்தகப்பனார் ப்ரஹ்மமனோத்தமரான முகுந்தாசாரியர். திருத்தாயார் பத்மையம்மன். திருத்தமையனார் குலம்பியர். தங்கள் குலம் பூர்வஶிகை, ஸாலங்க்ருத கோத்ரம். போதாயன ஸூத்ரம் யஜுஶ்ஶாகை. திருநாமங்கள் ஸ்ரீவிஷ்ணுசித்தர், பட்டர்பிரான், படடநாதர், பெரியாழ்வார். ஆசார்யர் ஸேனைமுதலியார். திருவாராதனம் லக்ஷ்மீ நாராயணப் பெருமாள். குமாரி சூடிக் கொடுத்தாள். கைங்கர்யம் திருநந்தவனம், திருமாலை. இருப்பிடம் ஸ்ரீவில்லிபுத்தூர். ஶிஷ்யன் பாண்டிய மஹாராஜன். இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் திருப்பல்லாண்டு பன்னிரண்டும், பெரியாழ்வார் திருமொழி நானூற்றறுபத்தொரு பாட்டும். இவர் பாடின திருப்பதிகள் தென்மதுரையில் மல்லாண்ட பெருமாள், கூடலூர் அழகர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்கோட்டியூர், திருவாய்ப்பாடி, வடமதுரை, திருமலை, திருவெள்ளறை, திருக்குறுங்குடி, கோயில், அழகர்திருமலை, திருக்குடந்தை, திருவநந்தபுரம், கண்டமென்னுங்கடிநகர்.

இவர்க்குத் தனியன்

17 குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாதாதுகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

இவர் எண்பத்தைந்து திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ பூமிப்பிராட்டியார் திருவவதாரமான சூடிக்கொடுத்த நாச்சியாருக்குத் திருவவதாரஸ்தலம் பாண்டியமண்டலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர். திருவவதரித்தது பெரியாழ்வாருடைய திருநந்தவனத்தில் திருத்துழாயடியிலே, திருநக்ஷத்ரம் ஆடி மாஸம் பூர்வபக்ஷத்தில் சதுர்த்தி செவ்வாய்க்கிழமை திருவாடிப்பூரம், வரீயாந்நாமயோகம் பத்ரகரணம் துலாலக்னம் மத்யாஹ்நஸமயத்தில். பூமியிலே இருந்து

acharya.org

பெரியாழ்வார் திருமாளிகையிலே வளர்ந்தருளினர். திருநாமங்கள் சூடிக்கொடுத்தாள், கோதை, ஆண்டாள், ஆழ்வார் திருமகள். இவளெழுந்தருளியிருக்கிறது நூற்றெட்டுத் திருப்பதிகளிலும். அதிலும் ப்ரத₄ானஸ்த₂லம் ஸ்ரீவில்லிபுத்தூர். இவரருளிச்செய்த ப்ரப₃ந்த₄ங்கள் திருப்பாவை முப்பது பாட்டும், நாச்சியார் திருமொழி நூற்று நாற்பத்து மூன்று பாட்டும். இவள் பாடின திருப்பதிகள் திருவாய்ப்பாடி, திருப்பாற்கடல், வடமதுரை, ஸ்ரீவில்லி புத்தூர், கோயில், திருமலை. இவளுக்குத் திருவாராத₄னம் நம்பெருமாள். ஆசார்யர் பெரிய பெருமாள்.

தனியன்

18. நீளாதுங்க₃ஸ்தநகி₃ரிதடீ ஸுப்தமுத்₃போ₃த்₄ய க்ருஷ்ணம்
பாரார்த்₂யம் ஸ்வம் ஶ்ருதி ஶதஶிரஸ்ஸித்₃த₄மத்₄யா-
பயந்தீ ।
ஸ்வோச்சி₂ஷ்டாயாம் ஸ்ரஜி நிக₃ளிதம் யா ப₃லாத்க்ருத்ய
பு₄ங்க்தே
கோ₃தா₃ தஸ்யை நம இத₃மித₃ம் பூ₄ய ஏவாஸ்து பூ₄ய: ॥

ஸ்ரீமத்₃ வநமாலிகாம்ஶபூ₄தரான தொண்டரடிப்பொடியாழ்வார்க்குத் திருவவதாரஸ்த₂லம் சோழதே₃ஶத்தில்திருக்காவேரிதீரத்திலே திருமண்டங்குடி என்கிற அக்₃ரஹாரம். திருநக்ஷத்ரம கலியுக₃ம் நூற்றெட்டு ஸம்வத்ஸரம் சென்ற பின்பு, ப்ரப₄வ ஸம்வத்ஸரம் மார்கழி மாஸத்தில் கேட்டை. திருத்தகப்பனர் ஸகலவேத₃ விஶாரத₃ரென்கிற பூர்வஶிகை₂ ப்₃ராஹ்மணோத்தமர். திருநாமங்கள் விப்ரநாராயணர், ப₄க்தாங்க்₄ரிரேணு, அன்பர்தாள்தூளி, தொண்டரடிப்பொடியாழ்வார். ஆசார்யர் ஸேனைமுதலியார். திருவாராத₄னம் நம்பெருமாள். இவருடைய ஆஶ்ரமம் ப்₃ரஹ்மசர்யம். இவர் அமுது செய்கிறது ஸ்ரீவைஷ்ணவ திருமாளிகைகளில் மாது₄கரம். கைங்கர்யம் திருநந்த₃வனம், திருமாலை. இருப்பிடம் நம்பெருமாள் கோயில். இவரருளிச்செய்த ப்ரப₃ந்த₄ங்கள் திருப்பள்ளியெழுச்சி பத்துப் பாட்டும், திருமாலை நாற்பத்தைந்து பாட்டும். நூற்றைந்து திருநக்ஷத்ரமெழுந்தருளியிருந்தார்.

acharya.org

இவர்க்குத் தனியன்

19. தமேவ மத்வா பரவாஸுதே₃வம்
ரங்கே₃ஶயம் ராஜவத₃ர்ஹணீயம் |
ப்ராபோ₃தி₄கீம் யோ₅க்ருத ஸூக்திமாலாம்
ப₄க்தாங்க்₄ரி ரேணும் ப₄க₃வந்தமீடே₃ ||

ஸ்ரீ வ த் ஸ ா ம் ஶ பூ₄ த ர ா ன திருப்பாணாழ்வாருக்குத் திருவவதார ஸ்த₂லம் சோழதே₃ஶத்தில் நம்பெருமாள் கோயில் ஸமீபத்திலே திருக்காவேரிதீரத்திலே உறையூர். திருவவதாரம் - நெல்லுக்கதிரிலே அயோநிஸம்ப₄வராய் அவதரித்தார். ஐந்தாம வர்ணத்திலே வளர்ந்தார் திரு நக்ஷத்ரம்-கலியுக₃ம் நூற்றிருபது ஸம்வத்ஸரம் சென்ற பின்பு து₃ர்மதி வருஷம் கார்த்திகை மாஸம் பூர்ணிமை புதன்கிழமை ரோஹிணி. திருநாமங்கள் திருப்பாணாழ்வார், பாண்பெருமாள், பாணர், யோகிவாஹனர், கூ₃யகஸார்வ பௌ₄மர், முனிவாஹனர், வித்₃யை கூ₃ானவித்₃யை. ஆசார் யர் ஸேனைமுதலியார். திருவாராத₄னம் நம்பெருமாள். இருப்பிடம் உறையூர். சிஷ்யர் ஸாரங்க₃முனி முதலான வர்கள். இவரருளிச்செய்த ப்ரப₃ந்த₄ம் அமலனாதிபிரான் பத்துப்பாட்டு. இவர் பாடின திருப்பதிகள் திருமலை, கோயில். இவர் ஐம்பது திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

இவர்க்குத் தனியன்

20. ஸ்ரீலோக ஸாரங்க₃மஹாமுநீந்த்₃ர
ஸ்கந்த₄ாதி₄ரூட₄ம் கலயாமி நித்யம் |
களங்கஹீநம் கமநீயப₄க்திம்
கவீஶ்வரம் கூ₃ாயகஸார்வபௌ₄மம் ||

21. ஆபாத₃சூட₃மநுபூ₄ய ஹரிம் ஶயாநம்
மத்₄யே கவேரது₃ஹிதுர் முதி₃தாந்தராணும் |
அத்₃ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணும்
யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ||

ஶார்ங்கா₃ம்ஶ பூ₄தரான திருமங்கையாழ்வாருக்குத் திருவவதார ஸ்த₂லம் சோழதே₃ஶத்தில் திருக்காவேரி ஸாக₃ரஸங்க₃ம ப்ரதே₃ஶத்திலே திருக்குறையலூர். திரு

நக்ஷத்ரம் கலியுகம் இருநூற்றேழு ஸம்வத்ஸரம் சென்ற பின்பு நளஸம்வத்ஸரம் கார்த்திகைமாஸம் வியாழக்கிழமை க்ருத்திகை நக்ஷத்ரம் பூர்ணிமை. திருவவதாரம் சதுர்த்த₂ வர்ணத்திலே, திருநாமங்கள் பரகாலன், கலியன், கலித்₄வம்ஸன், கவிலோகதி₃வாகரன், சதுஷ்கவிஶிக₂ாமணி, ஷட்ப்ரப₃ந்த₄கவி, கலிவைரி, நீலன், நாலுகவிப்பெருமாள், திருநாவீறுடையபெருமாள், மங்கையர்கோன், ஆலிநாடன், அருள்மாரி, திருமங்கையாழ்வார், அரட்டமுக்கி, அடையார் சீயம், கொங்குமலர்க் குழலியர்வேள், கொற்றவேந்தன், கொற்றவேல் மங்கைவேந்தன். தே₃வியார் குமுதவல்லி நாச்சியார். ஆசார்யர் ஸேனைமுதலியார். திருவாராத₄னம் சிந்தனைக்கினியார், மந்த்ரோபதே₃ஶம் பண்ணினவர் அழகியமணவாளப்பெருமாள். கைங்கர்யம் ப்ரதிஷ்₂டையும் திருமங்கை மடத்தில் குமுதவல்லிநாச்சியார் புருஷகாரமாக ஆயிரம் திருநாமத்துக்குத் ததீ₃யாராத₄னம். இவர் சிஷ்யர்கள் மைத்துனன் இளையாழ்வார், பரகால ஶிஷ்யர், நீர்மேல் நடப்பான், தாளூதுவான், தோராவழக்கன், நிழலில்மறைவான், உயரத்தொங்குவான். இவர் ஏறுங்குதிரை ஆடன்மா. இவரருளிச்செய்த ப்ரப₃ந்த₄ங்கள் பெரிய திருமொழி ஆயிரத்தெண்பத்துநாலு பாட்டும், திருக்குறுந்தாண்டகம் இருபது பாட்டும், திருநெடுந்தாண்டகம் முப்பது பாட்டும், சிறியதிருமடல் நூற்றுப்பதினாறு பாட்டும், பெரியதிருமடல் இருநூற்றெண்பத்தாறு பாட்டும், திருவெழுகூற்றிருக்கை ஒரு பாட்டும், தொங்கல் மூன்று பாட்டும். இவர் பாடின திருப்பதிகள் தஞ்சைமாமணி—வம்புலாஞ்சோலை, திருப்பிரிதி, திருவதரி, சாளக்கிராமம், நைமிசாரண்யம், அயோத்தி, திருவாய்ப்பாடி, வடமதுரை, கங்கைக்கரைக்கண்டம், வியன்புரிசை, சிங்கவேள்குன்றம், திருமலை, திருவெவ்வுளூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருகடல்மல்லை, திருநின்றவூர், திருவிடவெந்தை, பெருமாள் கோயிலிலே அஷ்டபு₄ஜம், பரமேச்சுரவிண்ணகரம், பச்சைவண்ணர், பவளவண்ணர், கள்வர், கச்சிவேளுக்கையாளரி, திருவூரகம், திருப்பேரகம், திருப்பாடகம், திருப்பாற்கடல், நிலாத்திங்கள் துண்டம், திருவெஃகா, விளக்கொளி

acharya.org

அத்தியூரான், நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் கார்வானம், பேரருளாளர், திருக்கோவலூர், திருவயிந்திர புரம், திருச்சித்திரகூடம், சீராம விண்ணகர், திருவாலி திருநகரி, திருக்குறையலூர், திருநாங்கூரிலே மணிமாடக் கோயில், வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம், திருத்தேவனார்தொகை, வண்புருடோத்தமம், செம்பொன் செய் கோயில், திருத்தெற்றியம்பலம், திருமணிக்கூடம், திருக்காவளம்பாடி, திருவெள்ளக்குளம், பார்த்தன்பள்ளி, திருவிந்தளூர், திருக்குடந்தை, திருவெள்ளியங்குடி, புள்ளம் பூதங்குடி, ஆதனூர், திருக்கூடலூர் திருவெள்ளறை, கோயில் திருவரங்கம், உறையூர், உத்தமர்கோயில், திருத் தண்காலூர், திருப்பேர், நந்திபுரவிண்ணகரம், திருவிண்ணகரம், திருநறையூர், திருக்கண்டியூர், திருமெய்யம், தஞ்சையாளி, திருச்சேறை, சிறுபுலியூர், பெரும்புலியூர், திருக்கண்ணமங்கை, திருக்கண்ணபுரம், திருததலைச்சங்க நாண்மதியம், திருக்கண்ணங்குடி, திருநாகை, திருப் புல்லாணி, திருக்குறுங்குடி, திருவல்லவாழ்நகரம், அழகர் திருமலை, திருக்கோட்டியூர், திருமோகூர். இவர் நம்பெருமாளுக்குச் செய்தருளின கைங்கர்யங்கள் திருமடைப் பள்ளி, திருநடைமாளிகை, ஆலிநாடன் திருமண்டபம், திருக்கொட்டாரம், ஐந்துகளஞ்சியம், இரண்டு திருமதிள், திருக்கோபுரம். இவர்க்கிருப்பிடம் நம்பெருமாள் கோயிலிலே வடதிருக்காவேரிதீரத்திலே திருப்பாற்றுறையிலே திரு மாளிகை. இவர் நூற்றஞ்சு திருநக்ஷத்ரம் எழுந்தருளி யிருந்தார். இவர் நம்பெருமாள் நியமனத்தினாலே திருக் குறுங்குடியிலே திருநாட்டுக்கெழுந்தருளினார். இவர் நாலு யுகத்திலும் நாலு வர்ணங்களிலும் திருவவதரித்து பகவத் பாகவதாசார்ய கைங்கர்யங்கள் அநேகம் பண்ணி யருளினார்.

இவர்க்குத் தனியன்

22. கலயாமி கலித்₄வம்ஸம் கவிலோகதி₃வாகரம் ।
யஸ்ய கோ₃பி₄: ப்ரகாஶாபி₄ராவித்₃யம் நிஹதம் தம: ॥

க்ஷும்பூ₄தரான மது₄ரகவியாழ்வாருக்குத் திருவவதார ஸ்த₂லம் பாண்டிய தேசத்தில் திருத்தாம்ரபர்ணீதீரத்தில்

acharya.org

திருக்கோளூர். திருவவதாரம் பூர்வஶிகை[1] ப்₃ராஹ்மண வர்ணத்தில். திருநக்ஷத்ரம் த்₃வாபரயுக₃ம் எட்டுலக்ஷத் தறுபத்து மூவாயிரத்து நூற்றுக்குமேல் விக்ரமஸம்வத்ஸரம் சித்திரை மாஸம் சுக்லபக்ஷத்தில் த₃ஶமி வெள்ளிக்கிழமை ஐந்தாந்தேதி சித்திரை. இவர் அஷ்டாங்க₃ யோக₃க்ரமத்தினால் ப₃த₃ரிகாஶ்ரமத்திலே நாராயணனை ஆஶ்ரயித்துத் தென்தே₃ஶத்திலே வந்து நம்மாழ்வாரை ஆஶ்ரயித்து, திருநகரியிலே நம்மாழ்வாரை விக்₃ரஹமாக ஏறியருளப்பண்ணி ஐம்பது திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவர் நம்மாழ்வார் விஷயமாக அருளிச்செய்த ப்ரப₃ந்த₄ம் கண்ணிநுண்சிறுத்தாம்பு பதினொரு பாட்டு. இவர்க்குத் திருவாராத₄னம் நம்மாழ்வார்.

தனியன்

23. ஹஸ்தஸ்த₂ தாளத்₃விதயம ப்ரபத்₃யே
ஶடா₂ரி வாக்₃வ்யாஸ முதா₃ரகீர்த்திம் ।
மாது₄ர்ய ஸம்ஶ்லிஷ்ட கவித்வயுக்தம்
மஹத்த்வ ஸம்பா₄வித பு₃த்₃தி₄தத்வம் ||

ஸேனைமுதலியாருடைய மந்த்ரியான க₃ஜாஸ்யருடைய அம்ஶபூ₄தரான ஸ்ரீமந்நாத₂முனிகளுக்குத் திருவவதாரஸ்த₂லம் சோழதேசத்தில் வீரநாராயணபுரம். திருநக்ஷத்ரம் கலியுகம் மூவாயிரத்து இரு(?)நூற்று இருபத்துநாலு வருஷத்துக்குமேல் ஶோப₄க்ருத் ஸம்வத்ஸரம் ஆனி மாஸம் ஏழாந்தேதி பௌர்ணிமை புதன்கிழமை அனுஷம். திருத்தகப்பனார் ஈஶ்வரபட்டாழ்வார் குடி சொட்டை. குமாரர் ஈஶ்வரமுனிகள். திருநாமங்கள் ஸ்ரீமந்நாத₂முனிகள், ஸ்ரீரங்க₃நாத₂முனிகள், நாத₂ப்₃ரஹ்மர். ஆசார்யர் நம்மாழ்வார். புருஷகாரர் மது₄ரகவியாழ்வார். திருவாராத₄னம் மன்னனார். இருப்பிடம் நம்பெருமாள் கோவில். சிஷ்யர் உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், பிள்ளை கருணாகரதா₃ஸர், நம்பி கருணாகரதா₃ஸர், ஏறுதிருவுடையார் திருக்கண்ணமங்கையாண்டான், வானமாபலை தெய்வநாயக ஆண்டான், உருப்புட்டூராச்சான்பிள்ளை, சோகத்தூராழ்வான், கீழையகத்தாழ்வான், மேலையகத்தாழ்வான்,

acharya.org

ஆக சிஷ்யர் பதினொரு திருநாமம். இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் ந்யாயதத்வமென்கிற ஶாஸ்த்ரமும், யோகரஹஸ்யமும், / புருஷநிர்ணயமும். இவர்க்கு யோகரஹஸ்யஜ்ஞானமும், கண்ணிநுண் சிறுத்தாம்பும், மதுரகவியாழ்வார் சிஷ்யரான ஸ்ரீபராங்குஶதாஸர் ப்ரஸாதிக்கையாலே மதுரகவியாழ்வார் புருஷகாரரானார். யோகதஶையிலே ஸாக்ஷாத்கரிக்கையாலும், திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களாலும், பகவத்ப்ரபந்தாதி விஶேஷங்களாலும் நம்மாழ்வார் ஆசார்யரானார். இவர் நம்பெருமாளுக்கு விண்ணப்பம் செய்தார். இவரே குருபரம்பரைக்கு ப்ரதானர். இவர் யோகாப்யாஸ க்ரமத்தாலே முந்நூற்றுமுப்பது திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்து குருகைக்காவலப்பன் கோயிலிலே சக்ரவர்த்தித் திருமகனார் திருவடிகளிலே சேர்ந்தார். தாத்ரு ஸம்வத்ஸர மாக ஶுக்லைகாதஶி தீர்த்தம்.

இவர்க்குத் தனியன்

24. நமோ஽சிந்த்யாத்புதாக்லிஷ்டஜ்ஞானவைராக்யராஶயே|
நாதாய முநயே஽காதபகவத்பக்திஸிந்தவே ||

ஜயத்ஸேநாம்ஶபூதரான உய்யக்கொண்டாருக்குத் திருவவதார ஸ்தலம் கோயிலுக்கு வடக்கு திருவெள்ளறை. திருநக்ஷத்ரம் கலியுகம் மூவாயிரத்து (எண்ணூற்று?) இருபத்தேழுக்குமேல் பராபவ வருஷம் சித்திரை* மாஸம் வெள்ளிக்கிழமை பௌர்ணமி கார்த்திகை. திருநாமங்கள் உய்யக்கொண்டார், புண்டரீகாக்ஷர், பத்மாக்ஷர், ராஜீவாக்ஷர், அரவிந்தாக்ஷர். ஆசார்யர் ஸ்ரீநாதமுனிகள். திருவாராதனம் நம்மாழ்வார். சிஷ்யர் மணக்கால்நம்பி, திருவல்லிக்கேணி பாண்பெருமாள் அரையர், சேட்டலூர் செண்டலங்காரதாஸர், ஸ்ரீபுண்டரீகதாஸர், கோமடம் திருவிண்ணகரப்பன், உலகபெருமாள் நங்கை. இருப்பிடம் கோயில். இவர் நூற்றைந்து திருநக்ஷத்ரமெழுந்தருளியிருந்தார்.

/ மஹாபுருஷநிர்ணயம் ஆளவந்தாருடைய நூல்; புருஷநிர்ணயம் வேறாயிருக்கலாம்.

acharya.org

தனியன்

25. நமஸ்யாம்யரவிந்தா₃க்ஷம் நாத₂பா₄வே வ்யவஸ்தி₂தம் ।
ஶுத்₃த₄ஸத்த்வமயம் ஶௌரேரவதாரமிவாபரம் ॥

26 நம: பங்கஜநேத்ராய நாத₂ ஶ்ரீபத₃பங்கஜே ।
ந்யஸ்த ஸர்வப₄ராயாஸ்மத் குலநாதா₂ய தீ₄மதே ॥

குருகைக் காவலப்பனுக்குத் திருவவதார ஸ்த₂லம் பாண்டியதேசத்தில் திருக்குருகூர் திருநக்ஷத்ரம் தை மாஸத்தில் விஶாகம். இருப்பிடம் ஸ்ரீமந்நாத₂முனிகளுடைய திருப்பள்ளி. அது அன்றுமுதலாகச் சோழதே₃ஶத்திலே திருக்காவேரிதீரத்தில் குருகைக் காவலப்பன் கோயிலென்று ப்ரஸித்₃த₄மாயிற்று. அவர்க்கு வித்₃யை அஷ்டாங்க₃ யோக₃ம். ஆசார்யர் நாத₂முனிகள். திருவாராத₄னம் சக்ரவர்த்தித் திருமகனர். வர்ணம் ப்₃ராஹ்மணேத்தமர். புருஷகாரர் புண்ட₃ரீகாக்ஷர். இவர் நூற்றைம்பத்தொரு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

தனியன்

27. நாத₂மௌநி பத₃ாஸக்தம் ஜ்ஞாநயோகா₃தி₃ ஸம்பத₃ம் ।
குருகாதி₄ப யோகீ₃ந்த்₃ரம் நமாமி ஶிரஸா ஸதா₃ ॥

குமுத₃ாக்ஷாம்ஶபூ₄தரான மணக்கால் நம்பிக்குத் திருவவதார ஸ்த₂லம் சோழதே₃ஶத்திலே திருக்காவேரிதீரத்தில் கோவில் ப்ரதே₃ஶம் மணக்கால் - என்கிற க்₃ராமம். திருநக்ஷத்ரம் - கலியுக₃ம் மூவாயிரத்துத்தொள்ளாயிர வருஷத்துக்குமேல் விரோதி₄ ஸம்வத்ஸரம் மாசி மாஸம் புதன்கிழமை பூர்வபக்ஷம் சதுர்த்த₃சி மக₄ாநக்ஷத்ரம். இருப்பிடம் கோயில். திருநாமங்கள் மணக்கால் நம்பி, ஸ்ரீராமமிஶ்ரர். ஆசார்யர் உய்யக்கொண்டார். திருவாராத₄னம் நம்பெருமாள். வர்ணம் ப்₃ராஹ்மணோத்தமர். சிஷ்யர் ஆளவந்தார், திருவரங்கப்பெருமாளரையர், தெய்வத்துக்கரசுநம்பி, பிள்ளையரசுநம்பி, சிறுபுள்ளூருடையார்பிள்ளை, திருமாலிருஞ்சோலைதா₃ஸர், வங்கிபுரத்தாச்சி.

தனியன்

28. அநுஜ்ஜித க்ஷமாயோகமபுண்ய ஜநபாதகம் |
அஸ்ப்ருஷ்டமதராகம் தம் ராமம் துர்யமுபாஸ்மஹே ||

29. பகவத் பக்திதுக்தாப்தி க்ருதகாடாவகாஹநம் |
நிர்முக்த தாபத்ரிதயம் ஸ்ரீராமம் ஶரணம் ஶ்ரயே ||

இவர் நூற்றஞ்சு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

ஸிம்ஹாஸநாம்ஶ பூதரான ஆளவந்தாருக்குத் திருவவதார ஸ்தலம் சோழ தேசத்திலே திருக்காவேரிதீரத்தில் வீரநாராயணபுரம். திருநக்ஷத்ரம் கலியுகம் மூவாயிரத்து (தொள்ளாயிரத்து?) எழுபத்தேழுக்குமேல் தாதுவருஷம் ஆடி மாஸம் பௌர்ணமி வெள்ளிக்கிழமை உத்தராடம் விஷ்கம்பம் பவகரணம். திருத்தகப்பனார் ஈஶ்வரமுநிகள். திருப்பாட்டனார் நாதமுனிகள். திருத்தாயார் ஸ்ரீரங்க நாயகி. குமாரர் திருவரங்கப்பெருமாளரையர், தெய்வத்துக் கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சொட்டைநம்பி. திருநாமங்கள் யாமுனாசார்யர், யமுனைத்துறைவர், வாதிமத்தேபஸிம்ஹேந்த்ரர். ஆளவந்தார், பெரியமுதலியார். குடி சொட்டை. திருவாராதனம் நம்பெருமாள். இருப்பிடம் கோயில். இவர்க்கு நாதமுனிகள் - யாமுனாசார்யரென்கிற திருநாமமும், பகவத் ஸம்பந்தமும், மந்த்ரோபதேசமும் ஸாதித்தருளி, தத்வஹித புருஷார்த்தங்கள் ப்ரஸாதிக்க உய்யக்கொண்டாருக்கு நியமித்து, யோகரஹஸ்யம் ப்ரஸாதிக்கக் குருகைக்காவலப்பனுக்கு நியமித்தார். அந்த உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிக்கு நியமித்தார். ஆகையாலே இவருக்குப் புருஷார்த்தங்களும் பகவத் விஷயமும் நாலாயிரமும் சதுர்த்தாஶ்ரம ஸ்வீகாரமும் முதலான அர்த்த விஶேஷங்களெல்லாம் ப்ரஸாதித் தருளினவர் ஸ்ரீராமமிஶ்ரர். ஆக இவர்க்காசாரியர் ஸ்ரீமந் நாதமுனிகளும், புருஷகாரர் மணக்கால் நம்பியுமாம். குருபரம்பரை வரிசைக்கு இவர்க்கு ஆசார்யர் மணக்கால் நம்பி. ஶிஷ்யர்கள் பெரியநம்பி, பெரியதிருமலைநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், தெய்வவாரியாண்டான், வானமாமலையாண்டான், ஈஶ்வராண்டான், ஜீயராண்டான், ஆளவந்தாராழ்வான், திருமோகூரப்பன்,

acharya.org

திருமோகூர் நின்றார், தேவப்பெருமாள் மாறனேரி நம்பி, திருக்கச்சிநம்பி, திருவரங்கப்பெருமாளரையர், திருக்குருகூர் தாஸர், வகுளாபரண ஸோமயாஜியார், அம்மங்கி, ஆள்கொண்டி, வடமதுரையில் பிறந்த கோவிந்ததாஸர், ராஜபுரோஹிதரான நாத₃முனிதாஸர், ரங்கசோழாவின் ராஜபத்னியான திருவரங்கத்தம்மன் ஆக சிஷ்யர் ப்ரத₄ானரானவர் இருபத்திருவர். இவரருளிச் செய்தருளின ப்ரப₃ந்த₄ங்கள் ஸ்தோத்ரரத்னம், ஸித்₃தி₄த்ரயம், ஸ்ரீகீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம், ஆக₃மப்ராமாண்யம், சது:ஶ்லோகி. இவர் சதுர் வேத₃ ஷட் ஶாஸ்த்ராதி₃ ஸகலவித்₃யா பாட₂ங்களும் அருளிச்செய்து நூற்றிருபத்தஞ்சு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவர் நம்பெருமாள் அநுஜ்ஞையினாலே திருநாட்டுக்கெழுந்தருளின ஸ்த₂லம் கோயில். நிக்ஷேபம் பண்ணப்பட்ட ஸ்த₂லம் திருப்பார்த்துறை (பாற்றுறை?) யிலே.

இவர்க்குத் தனியன்

30 யத்பத₃ாம்போ₄ருஹத்₄யாந வித்₄வஸ்தாஶேஷகல்மஷ: |
வஸ்துதாமுபயாதோऽஹம் யாமுநேயம் நமாமி தம் ||

ஶங்குகர்ணும்ஶபூ₄தரான திருவரங்கப்பெருமாளரையருக்குத் திருவவதார ஸ்த₂லம் கோயில். திருநக்ஷத்ரம் பிங்கள வர்ஷம் வைகாசிமாஸம் கேட்டை. திருத்தகப்பனார் யாமுனாசார்யர். திருத்தாயார் ஸ்ரீரங்கநாச்சியார். திருப்பாட்டனார் ஈஶ்வரமுனிகள். திருத்தம்பியார் தெய்வத்துக்கரசுநம்பி, பிள்ளையரசுநம்பி, சொட்டைநம்பி, திருநாமங்கள் திருவரங்கப்பெருமாளரையர், ரங்க₃ார்யர், குடி சொட்டை, திருவாராதனம் அழகிய மணவாளப்பெருமாள். ஆசார்யர் மணக்கால்நம்பி. இருப்பிடம் கோயில். சிஷ்யர் ஸ்ரீப₄ாஷ்யகாரர். இவர் நூற்றுப்பதினைந்து திருநக்ஷத்ரமெழுந்தருளியிருந்தார்.

தனியன்

31. ஸ்ரீராமமிஶ்ரபத₃பங்கஜ சஞ்சரீகம்
ஸ்ரீயாமுநார்யவரபுத்ரமஹம் கு₃ணாட்₄யம் |

acharya.org

ஸ்ரீரங்க₃ ராஜசருணா பரிணாம த₃த்தம்
ஸ்ரீபா₄ஷ்யகார சரணம் வரரங்க₃மீடே₃ ||

குமுத₃ாம்ஸபூ₄தரான பெரியநம்பிக்குத் திருவவதார ஸ்த₂லம் கோயில். திருநக்ஷத்ரம் கலியுகம் நாலாயிரத்து முப்பத்தெட்டுக்குமேல் ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாஸம் புதன்கிழமை பூர்வபக்ஷம் பஞ்சமி கேட்டை. குடி சாந்தனூர். குலம் ப்₃ருஹச்சரணம் பா₄ரத்₃வாஜகோ₃த்ரம் யஜுஸ்ஸாகை. திருநாமங்கள் பெரியநம்பி, ஸ்ரீபராங்குஸ த₃ாஸர், மஹாபூர்ணர், பூர்ணாசார்யர். குமாரர் புண்ட₃ரீகாக்ஷர். குமாரத்தி அத்துழாய். திருவாராதனம் அழகிய சிங்கர், ஆசார்யர் ஆளவந்தார். சிஷ்யர் திருக்கச்சிநம்பி, எம்பெருமானார். மலைகுனியநின்றார், ஆரியூரில் ஸ்ரீசடகோப தாஸர், அணியரங்கத்தமுதனார் பிள்ளை, திருவாய்க்குல முடையார் பட்டர் முதலானவர்கள். இருப்பிடம் கோயில், இவர் நூற்றஞ்சு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். தத₃நந்தரமாகத், திருநாட்டுக்கெழுந்தருளினது சோழதேசத்தில் பசியது(பசுபதி?) கோயில். இவர்செய்தருளின க்₃ரந்த₂ம் திருப்பதிக்கோவை. இவர்மாறனேரி நம்பிக்கு ப்₃ரஹ்மமேத₄ ஸம்ஸ்காரம் பண்ணினார்.

இவர்க்குத் தனியன்

32. த₃யாநிக்₄நம் யதீந்த்₃ரஸ்ய தே₃ஶிகம் பூர்ணமாஶ்ரயே |
யேந விஶ்வஸ்ருஜோ விஷ்ணோரபூர்யத மநோரத₂: ||

33. கமலாபதி கல்யாணகு₃ணாம்ருதநிஷேவயா |
பூர்ணகாமாய ஸததம் பூர்ணாய மஹதே நம: ||

ஸௌம்யக₃ாம்ஸ பூ₄தரான பெரியதிருமலைநம்பிக்குத் திருவவதார ஸ்த₂லம் தொண்டைமண்டலத்தில் திருமலை. திருநக்ஷத்ரம் சித்திரை மாஸம் ஸ்வாதி. திருவவதாரம் திருவேங்கடமுடையான் வரப்ரஸாத₃த்தாலே. திருநாமங்கள் பெரியதிருமலைநம்பி. ஸ்ரீசைலபூர்ணர். குமாரர் பிள்ளை திருமலைநம்பி. குமாரத்திகள் இருவர், மருமக்கள் எம்பாரும், சிறியகோவிந்தப்பெருமாளும், எம்பெருமானாரும். திருவாராத₄னம் மலைகுனியநின்ற பெருமாள். ஆசார்யர் ஆள

acharya.org

வந்தார், ஶிஷ்யர் ஸ்ரீபாஷ்யகாரர். இருப்பிடம் திருமலை. இவர் திருவேங்கடமுடையானுக்குத் திருத்தகப்பனார். திருமலையார்க்கெல்லாம் கூடஸ்தர்.

இவர்க்குத் தனியன்

34. பிதாமஹஸ்யாபி பிதாமஹாய ப்ராசேதஸாதேஶ ப²ல ப்ரதா³ய ।
ஸ்ரீபாஷ்யகாரோத்தம தேஶிகாய ஸ்ரீஶைலபூர்ணாய நமோ நம: ஸ்தாத் ॥

ஸ்ரீபுண்டரீகாம்ஶபூதரான திருக்கோட்டியூர் நம்பிக்குத் திருவவதார ஸ்தலம் பாண்டிய மண்டலத்தில் திருக்கோட்டியூர். திருநக்ஷத்ரம் ஸர்வஜித் வருஷம் வைகாசி மாஸம் ரோஹிணி; திருநாமங்கள் திருக்கோட்டியூர்நம்பி. கோஷ்டபூர்ணர், கோஷ்டபுரீஶர், காஶ்யபகோத்ரம், யஜுஶ்ஶாகை, பூர்வஶிகை. த்ராஹ்யாயணஸூத்ரம். குமாரர் தெற்காழ்வான். குமாரத்தி தேவகிப் பிராட்டியார். திருவாராதனம் தெற்காழ்வான். ஆசார்யர் ஆளவந்தார், சிஷ்யர் ஸ்ரீபாஷ்யகாரர். இருப்பிடம் திருக்கோட்டியூர். இவர் நூற்றைந்து திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

தனியன்

35. ஸ்ரீவல்லபபதாம்போஜ தீபக்த்யம்ருதஸாகரம் ।
ஸ்ரீமத்கோஷ்டபுரீபூர்ணம் தேஶிகேந்த்ரம் பஜாமஹே ॥

வாமநாம்ஶ பூதரான திருமாலையாண்டானுக்குத் திருவவதார ஸ்தலம் அழகர்கோயில். திருநக்ஷத்ரம் ஸர்வதாரி வருஷம் மாசி மாஸத்தில் மகம். திருநாமங்கள் மாலாதரர். ஸ்ரீஜ்ஞாநபூர்ணர். குமாரர் சுந்தரத்தோளுடையார். திருவாராதனம் அழகர். ஆசார்யர் ஆளவந்தார், சிஷ்யர் ஸ்ரீபாஷ்யகாரர். இருப்பிடம் அழகர் கோயில்.

இவர்க்குத் தனியன்

36. பக்தாம்ருதம் வாஞ்சிதபாரிஜாதம் மாலாதரம் யாமுநபாதபக்தம் ।

ஶ்ரீபா4ஷ்யகாரார்த்த2 ஹிதோபதே3ஶம் ஶ்ரீஜ்ஞாந
பூர்ணம் ஶிரஸா நமாமி ||

மாறனேரி நம்பிக்குத் திருவவதார ஸ்த2லம் பாண்டிய மண்டலத்தில் புராந்தகம் என்கிற க்ராமம். இருப்பிடம் கோயில். ஆசார்யர் யாமுனாசார்யர், திருநக்ஷத்ரம் ஆடி மாஸம் ஆயில்யம். திருவவதாரம் சதுர்த்த2வர்ணத்தில்.

தனியன்

37. யாமுநாசார்யஸச்சி2ஷ்யம் ரங்க3ஸ்த2லநிவாஸிநம் |
ஜ்ஞாநப4க்த்யாதி3ஜலதி4ம் மாறனேரிகு3ரும் ப4ஜே ||

ஸபர்யம்ஸபூ4தரான திருக்கச்சி நம்பிக்குத் திருவவதார ஸ்த2லம் தொண்டை மண்டலத்தில் பெருமாள் கோயிலுக்குப்பூர்வபா4க3த்திலே த4ர்மபுரி என்னும் பூவிருந்தவல்லி. திருநக்ஷத்ரம் ஸௌம்ய4க்ருத் வருஷம் மாசி மாஸத்தில் மிருகஶீர்ஷம். திருவவதாரம் சதுர்த்த2வர்ணத்தில். திருநாமங்கள் திருக்கச்சிநம்பி, ஶ்ரீகாஞ்சீபூர்ணர். இருப்பிடம் பெருமாள் கோயில் திருவாராத4னம் பேரருளாளப் பெருமாள். ஆசார்யர் மஹாபூர்ணர். கைங்கர்யம் தேவப் பெருமாளுக்குத் திருவாலவட்டம் ஸமர்ப்பிக்கிறது. இவர் செய்தருளின க்3ரந்த2ம் வரத3ராஜாஷ்டகம். தேவப்பெருமாளுக்கு அத்யந்தம் அந்தரங்க3ர். ஶ்ரீபா4ஷ்யகாரருக்கு ஹிதப்ரவர்த்தகர்.

இவர்க்குத் தனியன்

38. தே3வராஜ த3யாபாத்ரம் ஶ்ரீகாஞ்சீபூர்ணமுத்தமம் |
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தே3ஹம் ஸஜ்ஜநாஶ்ரயம் ||

ஶ்ரீமத்3வேத3மார்க3ப்ரதிஷ்டா2பநாசார்யோப4யவேதா3ந்தாசார்ய த3ர்ஶந ஸ்தா2பநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யோப4யவிபூ4தி நாயகரான எம்பெருமானார்க்குத் திருவவதார ஸ்த2லம் தொண்டைமண்டலத்தில் பெருமாள் கோயிலுக்கு ஈஶானபா4க3த்தில் இருக்கிற ஶ்ரீபெரும்பூதூர்; திருநக்ஷத்ரம் கலியுக3ம் ஶகாப்தம் தொள்ளாயிரத்து முப்பத்தொன்பதுக்குமேல் பிங்கள (?) வருஷம் சித்திரை மாஸம் பதின்மூன்றுந்தேதி. வியாழக்கிழமை பூர்வபக்ஷத்தில்

acharya.org

பஞ்சமி. திருநக்ஷத்ரம் திருவாதிரை ஆயுஷ்மாந்நாமயோகம் பத்ரகரணம் கர்க்கடகலக்னம்.

ஶ்லோகம்

39. யதா₃வதாராந்மது₄ரா முராரே:
ராமஸ்ய ஸாகேதபுரீ ச யத்₃வத் ।
தத₂ா யதீந்த்₃ரஸ்ய க்ருபாஶ்ரயஸ்ய
புண்யோத்தரா பூ₄தபுரீ ப₃பூ₄வ ॥

என்கிற ஶ்லோகார்த்த₂ விவரணமான திவ்யாவதாரம். ஶேஷாம்ஶம். திருத்தகப்பனார் ஸர்வக்ரது கேஶவதீக்ஷிதர், திருத்தாயார் காந்திமதி அம்மையார். திருத்தமக்கையார் நாச்சியாரம்மன் குடி ஆஸூரி. குலம் வைஷ்ணவன். ஹாரீத கோத்ரம், யஜுஸ்ஶாகை. ஆபஸ்தம்பஸூத்ரம்; ஜாதகர்ம நாமகரண சௌளோபநயனாதி ஸத்கர்மங்களும் வேதா₃த்₄யயந நித்யாநுஸந்தா₄னங்களும் ஸாதித்தருளினார் திருத்தகப்பனார். சாத்தின திருநாமம் இளையாழ்வார். இவர்க்கு ஶாஸ்த்ரங்கள் விண்ணப்பஞ்செய்தவர் யாத₃வப்ரகாஶர். அப்போதிவர் ஊமைக்கும் ப்ரஹ்மரக்ஷஸ்ஸுக்கும் மோக்ஷம் ஸாதி₄த்தருளினார். இவர்க்கு ஹிதப்ரவர்த்தகர் திருக்கச்சி நம்பி கைங்கர்யம் ப்ரதிதி₃னமும் தேவப்பெருமாளுக்குத் திருமஞ்சனம். மது₄ராந்தகத்திலே சக்ரவர்த்தித்திருமகனார் ஸந்நிதி₄யில் இவர்க்குப் பெரிய நம்பி—

40. தாப புண்ட்₃ரஸ் தத₂ா நாம மந்த்ரோ யாக₃ஶ்ச பஞ்சம: ।
அமீ பரமஸம்ஸ்காரா: பாரமைகாந்த்யஹேதவ: ॥

என்கிற ஶ்லோகார்த்த₂விவரணமான சக்ராங்கநமும், திருமண் ஸ்ரீசூர்ணங்களும் ராமாநுஜனென்கிற தா₃ஸ்ய நாமமும். ஸ்ரீ அஷ்டாக்ஷரீமஹாமந்த்ரமும். த்₃வயசரமஶ்லோகங்களும், மந்த்ரரத்நபாத்₃யனை பேரருளாளப்பெருமாளையும் ஸாதித்தருளி, அநந்தரம் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளி, திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, நாச்சியார்திருமொழி, பெரியாழ்வார்திருமொழி முதலான ஈராயிரமும் ஸாதித்தருளினார். தத₃நந்தரம் இவர் திருவனந்தஸரஸ்ஸுதீரத்தில் பேரருளாளர் ஸந்நிதியிலே சதுர்த்தா₂ஶ்ரமஸ்வீகாரம் பண்ணியருளினார். அப்போது

acharya.org

இவர்க்கு தேவப்பெருமாள் யதிராஜரென்னும் திருநாமஞ் சாத்தியருளினார், தத்ஸமயத்திலே பாகிநேயரான தாஸரதியும் ஸகோத்ரரான கூரத்தாழ்வானும் வந்து இவரை ஆஶ்ரயித்தார்கள். பின்பு யாதவப்ரகாஶரும் வந்து ஆஶ்ரயித்தார். அவருக்கு தாஸ்யநாமம் கோவிந்ததாஸரென்று திருநாமம் சாத்தியருளினார்.

நம்பெருமாள் உபயவிபூதிகளுக்கும் யதிராஜரைப் பட்டங்கட்டி உடையவரென்று திருநாமம் சாத்தியருளினார். இவர்க்குத் திருவரங்கப்பெருமாளரையர், பெரிய திருமொழியும் திருவாய்மொழியும் மூலம் கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானம் ஸாதித்தருளி மஞ்சள் காப்பு கைங்கர்யத்துக்குத் திருவுள்ளமுகந்து, த்வயார்த்தம் ஸாதித்தருளி லக்ஷ்மணமுனி என்கிற திருநாமமும் சாத்தித் தம்முடைய திருத்தப்பியாரான சொட்டை நம்பியை இவர் திருவடிகளில் ஆஶ்ரயிப்பித்தருளினார். பெரியநம்பி தம்முடைய குமாரரான புண்டரீகாக்ஷரை இவர் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்தருளினார். திருக்கோட்டியூர் நம்பி திருமந்த்ரார்த்தமும் எம்பெருமானார் என்கிற திருநாமமும் சரமஶ்லோகார்த்தமும் ஸாதித்தருளி, தம்முடைய குமாரரான தெற்காழ்வானை இவர் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்தருளினார். திருமாலையாண்டான், பெரியதிருமொழி திருவாய்மொழி முதலான நாலாயிரத்துக்கும் வ்யாக்யானங்கள் ஸாதித்தருளி சடகோபன் பொன்னடி என்கிற திருநாமம் சாத்தி. தம்முடைய குமாரரான சுந்தரத்தோளுடையாரை இவர் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்தருளினார். பெரியதிருமலைநம்பி ஸ்ரீமத்ராமாயணவ்யாக்யானம் ஸாதித்தருளி, கோயிலண்ணனென்கிற திருநாமம் சாத்தி, தம்முடைய குமாரரான பிள்ளை திருமலை நம்பியையும், மருமக்களான எம்பாரையும் கோவிந்தப்பெருமாளையும் இவர் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்தருளினார். ஆகையாலே எம்பெருமானார்க்கு ஆசார்யர் ஐவர். ஸ்ரீபாஷ்யமருளிச்செய்கையாலே ஸ்ரீபாஷ்யகாரரென்று ஶாரதை திருநாமம் சாத்தினாள். ஆதிகேஶவப்பெருமாள் சாத்தின திருநாமம் பூதபுரீஶர். திருவேங்கடமுடையான் சாத்தின

acharya.org

திருநாமம் தேசிகேந்த்ரர். ஆக இவர்க்குத் திருநாமங்கள் பதினொன்று. அவை இளையாழ்வார், ராமாநுசர், யதிராஜர், உடையவர், லக்ஷ்மணமுனி, எம்பெருமானார், சடகோபன் பொன்னடி, கோயிலண்ணன், ஸ்ரீபாஷ்யகாரர், பூதபுரீசர், தேசிகேந்த்ரர் என்பனவாம். பின்னும் விசேஷ திருநாமங்கள் — யதீந்த்ரர், யதிகுலதுர்யர், யதிஸார்வபௌமர், யதிசக்ரவர்த்தி, யதிபதி, யதிநாதர், யோகீந்த்ரர், க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர். இவர் செய்தருளின க்ரந்தங்கள் ஸ்ரீபாஷ்யம், வேதாந்தஸாரம், வேதாந்ததீபம், வேதார்த்தஸங்க்ரஹம், கத்யத்ரயம், உடையவர் நித்யம், கீதாபாஷ்யம். இவரே யஜ்ஞமூர்த்தி முதலான மாயாவாதிகளை ஜயித்து திக்விஜயார்த்தமாக பூப்ரதக்ஷிணம் பண்ணினார். திருவேங்கடமுடையானுக்கு வக்ஷ:ஸ்தலத்தில் அலர்மேல் மங்கை நாச்சியாரை எழுந்தருளப்பண்ணி, திருவாழி திருச்சங்குகளும் சாதித்தருளினார்; ஆகையாலே திருவேங்கடமுடையானுக்கு மாமனாரும் ஆசார்யருமானார். திருக்குறுங்குடி நம்பிக்கு த்வயோபதேசம்பண்ணி, ராமாநுஜநம்பி என்று தாஸ்யநாமம் சாதித்தருளினார்; ஆகையாலே அவருக்கும் ஆசார்யரானார். ஸுல்தான் க்ருஹத்திலே எழுந்தருளியிருந்த செல்வப்பிள்ளையை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து திருநாராயணஸ்வாமி சேர்த்தியிலே எழுந்தருளப்பண்ணி, தாமங்கே அர்ச்சாவதாரமாய் நின்றார். லோகோபகாரார்த்தமாக ஸாளக்ராமத்திலே வடுகநம்பிக்குத் திருவடிகளும் ஸ்ரீபாததீர்த்தமும் ஸாதித்தருளினார். இப்படி ஸர்வரக்ஷகரான பெருமாள்களுக்கும் அவர்களுக்குத் திருவுள்ளமான கைங்கர்யங்களும் செய்தருளிப் பரமதநிரஸனம் ஸ்வமதஸ்தாபனம் பண்ணுகையாலே இவர் திருநாமத்திலே தர்சனம் விளங்கிற்று. இவர் திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகள்

41. ஏகாந்திபிர் த்வாதசாபி:ஸ்ஸஹஸ்ரை:
பீடைச்சதுஸ்ஸப்ததிபிஸ் ஸமேத: |
அந்யைரநந்தைரபி விஷ்ணுபக்தை:
ஸ்ரீரங்க ஆஸ்தே யதிஸார்வபௌம: ||

acharya.org

என்று சொல்லுகிறபடியே ஏகாந்திகள் பன்னீராயிரவரும் ஸிம்ஹாஸனஸ்த₂ரான ஆசார்ய புருஷர் எழுபத்து நால் வரும், ஜீயாள் எழுநூறுபேரும், சாத்தின கொத்தம்மை யார்களும், சாத்தாத கொத்தியம்மையார்களும், சாத்தின முதலிகளும், சாத்தாத முதலிகளும், பிள்ளையுறங்கா வில்லி தாஸர் முதலான திருநாமத₄ாரிகளும், பொன்னாச்சியார் முதலான திருநாமத₄ாரி ஸ்திரீகளும் அஸங்க்₂யேயர்.

அதில் ப்ரத₄ான சிஷ்யர் முதலியாண்டான், கந்தாடை யாண்டான், மாருதிப்பெரியாண்டான், மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான், ஈஶ்வராண்டான், ஜீயராண்டான், ஆண்டுகொண்டான், ஆள்கொண்டான், ஈயுண்ணியாண் டான், சேட்டலூராழ்வான், ஸோமாசியாண்டான், கூரத் தாழ்வான், தெற்காழ்வான், நெய்யுண்டாழ்வான், ஈயுண்ணிப்பிள்ளையாண்டான், மிளகாழ்வான், அநந்தாழ் வான், கோமடத்தாழ்வான், வேதாந்தியாழ்வான், மாட பூசையாழ்வான், அம்மங்கியாண்டான், கிடாம்பியாழ்வான், உக்கலாழ்வான், அரணபுரத்தாழ்வான், உருப்புட்டூராழ் வான், சொட்டைநம்பி, பிள்ளைதிருமலைநம்பி, தொண்டனூர் நம்பி, மருதூர்நம்பி, மழலூர்நம்பி, திருக்குறுங்குடிநம்பி, முடும்பைநம்பி, ஸ்ரீபராங்குசநம்பி, ஸ்ரீவில்லிபுத்தூர்நம்பி, வடுகநம்பி, வங்கிபுரத்துநம்பி, செடியெடுத்தநம்பி, சொக் கத்தூர்நம்பி, வங்கிபுரத்தாச்சி, புண்டரீகாக்ஷர், ஸ்ரீபராங் குசபட்டர், சிறுப்பள்ளி தேவராஜபட்டர், ஸ்ரீகோவிந்த பட்டர், நம்பியூரில் ஸ்ரீரங்கராஜபட்டர், உள்ளூரில் பெரிய பெருமாள் பட்டர், வரந்தரும் பெருமாள்பட்டர், எம்பார், சிறியகோவிந்தப்பெருமாள், சுந்தரத்தோளுடையார், திருக் குருகைப்பிரான் பிள்ளான், ஆர்க்காட்டுப் பிள்ளான், ராமாநுஜம்பிள்ளான், திருமலை நல்லான், வங்கிபுரத்தாச் சான், கோமாண்டூராச்சான், கிடாம்பியாச்சான், கொங் கிலாச்சான், ஈசம்பட்டியாச்சான், கணியனூர் சிறியாச் சான், மஞ்சப்பூர் சிறியாச்சான், என்னாச்சான், எச்சான், ஆஸூரி ஆதிகேசவப் பெருமாள், கிடாம்பிப் பெருமாள், மஹாமுனிப் பெருமாள், அம்மங்கிப் பெருமாள், பிள்ளை

திவ்யப்ரபந்தங்களும், ஈடு முதலான வ்யாக்யானங்களும் ஸாதித்தருளின ஆசார்யர் திருத்தமயனாரான பிள்ளை லோகாசார்யர். திருத்தாயார் ஸ்ரீரங்கநாச்சியார். இவர் செய்தருளின க்ரந்தங்கள் ஆசார்யஹ்ருதயம், திருப்பாவைக்கு ஸ்வாபதேஶ வ்யாக்யானம் ஆறாயிரம், திருவந்தாதிகளுக்கு வ்யாக்யானம் ஆறாயிரம், கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு வ்யாக்யானம், அருளிச்செயல் ரஹஸ்யம். இவர் சிஷ்யர் கூரகுலோத்தமதாஸர்.

இவர் தனியன்

87. த்ராவிடாம்நாயஹ்ருதயம் குருபர்வக்ரமாகதம்।
ரம்யஜாமாத்ருதேவேந தர்ஶிதம் க்ருஷ்ண ஸூநுநா ॥

கூரகுலோத்தமதாஸருக்குத் திருவவதார ஸ்தலம் கோயில். இருப்பிடம் கோயில். குலம் பூர்வசிகை. திருநக்ஷத்ரம் ஐப்பசி மாஸம் திருவாதிரை. பஞ்சஸம்ஸ்காரங்களும், நித்யானுஸந்தானங்களும் ஸாதித்தருளின ஆசார்யர் வடக்குத்திருவீதிப்பிள்ளை, திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களும், ஈடுமுதலானவ்யாக்யானங்களும், ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களும். ஶ்ருதப்ரகாஶிகையும் ஸாதித்தருளின ஆசார்யர் பிள்ளைலோகாசார்யர். தத்வத்ரயாதி ரஹஸ்யங்களும், ஸகலரஹஸ்யார்த்தங்களும் முதலான ஸகலார்த்தங்களும் ஸாதித்தருளின ஆசார்யர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாராசார்யர். திருவாராதனம் ஸ்ரீரங்கராஜர். சிஷ்யர் திருவாய்மொழிப்பிள்ளை, பெரியஜீயர் முதலானவர்கள்.

இவருக்குத் தனியன்

88. ஸ்வயமாஹ்ய ஶைலேஶ குரவேர்த்தப்ரதாநத:।
லப்தோதாராபிதம் கூரகுலோத்தம குரும பஜே।
லோகாசார்ய க்ருபாபாத்ரம் கௌண்டிந்ய குலபூஷணம்
ஸமஸ்தாத்ம குணாவாஸம் வந்தே கூரகுலோத்தமம் ॥

விளாஞ்சோலைப்பிள்ளைக்கு ஆசார்யர் பிள்ளை லோகாசார்யர். ஈடு ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களும், தத்வத்ரயாதி ரஹஸ்யங்களும் ஸாதித்தருளினவர் அழகிய மணவாளப்

acharya.org

பெருமாள் நாயனாராசார்யர். இவர் செய்தருளின க்ரந்தம் ஸப்தகாதை.

திருவாய்மொழிப்பிள்ளைக்குத் திருவவதார ஸ்தலம் பாண்டிய மண்டலத்தில் குந்திகை, திருநக்ஷத்ரம் விபவ வருஷம் வைகாசி மாஸம் விசாகம். திருநாமங்கள் திருமலையாழ்வார். திருவாய்மொழிப்பிள்ளை, ஸ்ரீசைலேசர். பஞ்ச ஸம்ஸ்காரங்களும் திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களும் ஸாதித்தருளின ஆசார்யர் பிள்ளைலோகாசார்யர், ஈடு முதலான பகவத் விஷயங்கள் ஸாதித்தருளினவர் நாலூராச்சான்பிள்ளை. ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களும், ச்ருதப்ரகாசிகையும் ஸாதித்தருளினவர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனாராசாரியர். தத்வத்ரயாதி பஞ்சரஹஸ்யங்களும், ஆசார்யஹ்ருதயமும், ரஹஸ்ய வ்யாக்யானங்களும் ஸாதித்தருளினவர் கூரகுலோத்தம தாஸர், மற்றும் வேண்டும் ரஹஸ்யங்களெல்லாம் ஸாதித்தருளினவர் விளாஞ்சோலைப்பிள்ளை. திருவாராதனம் இனவாயர்குலவர். இருப்பிடம் திருநகரி. இவர் செய்தருளின வ்யாக்யானம் பெரியாழ்வார் திருமொழிக்கு ஸ்வாபதேச வ்யாக்யானம். இவர் செய்தருளின கைங்கர்யம் ஆழ்வார் திருநகரி ஜீர்ணோத்தாரணம். இவர் சிஷ்யர் பெரியஜீயர், நம்மாழ்வார்கோயில் எம்பெருமானார் ஜீயர், எம்பெருமானார்கோயில் சடகோபஜீயர், தத்வேசஜீயர் முதலானவர்கள். இவர் நூற்றஞ்சு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவருக்குத் திருவத்யயனம் வைசாகம் க்ருஷ்ணாஷ்டமி.

இவருக்குத் தனியன்

89. நம: ஸ்ரீசைலநாதாய குந்திநகரஜந்மநே ।
ப்ரஸாதலப்தபரமப்ராப்யகைங்கர்யசாலிநே ॥

பெரியஜீயருக்குத் திருவவதார ஸ்தலம் பாண்டிய நாட்டில் கிடாரம். திருநக்ஷத்ரம் விஜய வருஷம் ஐப்பசி திருமூலம். திருவவதாரம் எம்பெருமானாருடைய இரண்டாம் அவதாரம். இருத்தகப்பனார் பிள்ளை லோகாசார்யர் திருவடிகளிலாச்ரயித்த திகழக்கிடந்தான் திருநாவீறுடைய

பிரான்தாதரண்ணன். திருத்தாயார் ஸ்ரீரங்கநாச்சியார். திருத்தம்பியார் திருமலையாழ்வார். பூர்வாச்ரமத்தில் குமாரர் ராமாநுஜாசாரியர். திருத்தமக்கை நாச்சியாரம்மன். குலம் ப்3ருஹச்சரணம். குடி கோமடம். இருப்பிடம் கோயில். திருவாய்மொழி முதலான திவ்யப்ரப3ந்த4ங்களும், ஈடு முதலான ப4க3வத்3 விஷயங்களும் ஸாதித்தருளினவர் ஸ்வாசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை. ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களும், ச்ருதப்ரகாசிகையும் ஸாதித்தருளினவர் கிடாம்பி திருமலை ஐயங்கார். தத்வத்ரயாதி3 ரஹஸ்யங்களெல்லாம் ஸாதித்தருளினவர் கூரகுலோத்தமதாஸர். திருவாராதனம் ஸ்ரீரங்கராஜர். திருநாமங்கள் பெரியஜீயர். மணவாளமாமுனி, ஸௌம்யஜாமாத்ருயோகீ3ந்த்3ரர், ரம்யஜாமாத்ருயோகீ3ந்த்3ரர், யதீந்த்3ரப்ரவணர், அழகியமணவாளஜீயர். காந்தோபயந்தா, வரவரமுநி, வரயோகி3, இராமாநுசன்பொன்னடி, ருசிரஜாமாத்ருயோகீ3ந்த்3ரர். ஆக இவருக்குத் திருநாமம் பதினொன்று. இவர் செய்தருளின க்ரந்தங்கள் தத்வத்ரயம், ரஹஸ்யத்ரயம், ஸ்ரீவசனபூஷணம், ஆசார்யஹ்ருதயம் ஞானசாரம், ப்ரமேயசாரம், பெரியாழ்வார் திருமொழி. நூற்றந்தாதி ஆக, எட்டு திவ்யப்ரப3ந்த4ங்களுக்கு வ்யாக்யானங்களும். ஈட்டுக்கு ப்ரமாணத்திரட்டு ஆறுயிரம், தத்வத்ரய ப்ரமாணத்திரட்டு, ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டு, ஆர்த்தி. யதிராஜவிம்சதி. உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி. திருவாராதனக்ரமம் இவை முதலான ப்ரப3ந்த4ங்கள்.

90\. ஸ்ரீமாந் ஸுந்த3ரஜாமாத்ருமுநி: பர்யாய பா4ஷ்யக்ருத் ।
பா4ஷ்யம் வ்யாகுர்வதஸ் தஸ்ய ச்ரோத்ரு கோடௌ
மமாந்வய: ॥

என்கிறபடியே எம்பெருமானுடைய புனரவதாரமான பெரிய ஜீயர் பூ4ப்ரத3க்ஷிணம் பண்ணி அநேக ஸ்த2லங்கள் ஜீர்ணோத்தாரணம் பண்ணியருளினார். திருநகரியில் திருவாய்மொழிப்பிள்ளைக்குத் தம்முடைய நிஜஸ்வரூபமான சேஷாவதாரத்தைக் காட்டினார். பரமத நிரஸன ஸ்வமத ஸ்த2ாபனம் பண்ணினார். ஸர்ப்பாதி3ஸ்த2ாவர ஜங்க3மாதி3களுக்கு மோக்ஷம் ஸாதித்தருளினார். வடமதுரையில்

acharya.org

ஜீர்ணோத்₃த₄ாரணம் பண்ணினார். நம்பெருமாளுக்கு ஈடு விண்ணப்பஞ் செய்கையாலே பெரிய ஜீயரென்று இவருக்கு நம்பெருமாள் திருநாமம் சாத்தினார். ஆகையாலே இவரெல்லாருக்கும் உத்தேஶ்யர். இவருடைய திருமேனி ஶ்வேத வர்ணமாயிருக்கும். ஆகையாலே வெள்ளை ஜீயரென்று திருநாமம். இவர் திருவடிகளிலே ஆஶ்ரயித்தவர்கள் வானமாமலை ஜீயர், பத்தங்கிபரவஸ்து பட்டர்பிரான் ஜீயர், திருவேங்கட ஜீயர், கோயில் கந்தாடையண்ணன், ப்ரதிவாதி பயங்கரமண்ணா, எறும்பியிலப்பா, அப்பிள்ளை, அப்பிள்ளான் இவரெண்மரும் அஷ்டதி₃க்க₃ஜங்கள். சேனை முதலியாண்டான் நாயனார், சடகோப தாஸரான நாலூர் சிற்ருத்தான், கந்தாடை போரேற்று நாயன், ஏட்டூர் சிங்கராசார்யர், கந்தாடை அண்ணப்பன், கந்தாடை திருக்கோபுரத்து நாயனார், கந்தாடை தாரணப்பை, கந்தாடை தோழப்பரப்பை, கந்தாடை அழைத்து வாழ்வித்த பெருமாள் ஆகிய இவர்கள் நவரத்னங்கள்.

திருப்பாணாழ்வார் தாஸர், வடுகநம்பி, ஜீயர் நாயனார், ஆளப்பிரானப்பை, திருவாழியாழ்வானப்பிள்ளை, பெரியாழ்வாரய்யன், ஸாது₄பட்டர், எம்பெருமானார் ஜீயர், நாலூர் சடகோப ஜீயர், அழகர் திருமலை யதிராஜ ஜீயர், காஞ்சுக்குளத்துப்பிள்ளை, கொங்கிலண்ணன், குளிகுளித்தண்ணன், நலந்திகழ் நாராயண ஜயங்கார், கிடாம்பியாச்சான் திருவம்ஶமான அப்பன், அணியார் பிள்ளை, சிங்கப்பெருமாள், அமுதனார், பெரியதோழப்பர், திருப்புத்தூரில் பெரியய்யங்கார், கந்தாடை ராமாநுஜய்யங்கார், சடகோபதாஸர், மஹாபலிவாண நாதராயன், ராவுமாதவநாயகன், ராகவராயன், பூதநாயகன் தொடக்கமானவர்கள் (சிஷ்யர்கள் ?). கோயில் கந்தாடை யண்ணன் (உடையவருக்கு முதலியாண்டானைப்போலே) இவருக்குப் பாது₃காஸ்த₂ானீயராயிருப்பர். எறும்பியிலப்பா (வடுகநம்பியைப்போலே) தேவு மற்றறியாதே அத்யந்தாபி₄மதராயிருப்பர். ப்ரதிவாதி ப₄யங்கரமண்ணா (ஆழ்வானைப்போலே) உசாத்துணையாயிருப்பார், அப்பிள்ளார் மடத்தில் ஸர்வப₄ரங்களையும்

acharya.org

நடத்திக் கொண்டு போருவர். வானமாமலை ஜீயர் ஆச்ரயித்தவன்று தொடங்கிப் பிரியாதாட்செய்திருப்பர் பட்டர் ஜீயர் பூர்வாச்ரமத்திலே கோவிந்ததாஸரப்பனென்று திருநாமத்தையுடையராய் முப்பது வருஷம் பிரியாதே இருந்து மஹாவிரக்தராய் ஜீயரான பின்பும் பிரிவில் தரியாமை முன்னிட்டு அடிமை செய்கையாலே எம்பாரைப்போலே பாதச்சாயாபன்னராயிருப்பர். ஜீயர் நாயனார் திருக்குருகைப்பிரான் பிள்ளானைப்போலே அத்யாதரணீயராயிருப்பர். இவர்களெல்லாருக்கும் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்கள் ஸாதித்துக்கொண்டு பெரிய ஜீயர் நம்பெருமாள் கோயிலிலே நூற்றிருபத்தைந்து(?) திருநக்ஷத்ரமெழுந்தருளி இருந்து திருநாட்டுக்கெழுந்தருளினார்.

இவருக்குத் தனியன்

91. ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம் ||

இந்தத் தனியன் எல்லோருக்குமுத்தேச்யம்.

வானமாமலை ஜீயருக்குத் திருவவதார ஸ்தலம் வானமாமலை. திருநக்ஷத்ரம் புரட்டாசியில் புனர்பூசம். ஆசார்யர் பெரிய ஜீயர். திருவாராதனம் அரங்கநகரப்பன். சிஷ்யர் ஆத்தான், ராமாநுஜன் பிள்ளை முதலானவர்கள். திருநாமங்கள் பூர்வாச்ரமத்தில் அழகிய வரதன்; பின்பு வானமாமலைஜீயர், ராமாநுஜஜீயர், வாநாத்ரியோகீ, ராமாநுஜமுனி இத்யாதிகள்.

இவருக்குத் தனியன்

92. ரம்யஜாமாத்ருயோகீந்த்ரபாதரேகாமயம் ஸதா |
ததாயத்தாத்மஸத்தாதிம் ராமாநுஜமுநிம் பஜே ||

பட்டர் பிரான் ஜீயருக்குத் திருவவதார ஸ்தலம் திருமலை திருப்பதி. திருநக்ஷத்ரம் கார்த்திகையில் புனர்பூசம். திருத்தகப்பனார் அரணைப்புரத்தாழ்வான் வம்சயரான மதுரகவியய்யர். குலம் வடமாள். பாரத்வாஜகோத்ரம். ஸாமசாகை. த்ராஹ்யாயண ஸூத்ரம். குலவ்யவஹாரம் பத்தங்கி பரவஸ்து. ஆசார்யர் பெரிய ஜீயர். திருவா

acharya.org

ராதனம் அழகிய மணவாளர். சிஷ்யர் பூர்வாஶ்ரமத்தில் பித்ருவ்யபுத்ரரான கோயிலப்பன், குமாரரான கோயிலப்பன், பரவஸ்து அண்ணன், பரவஸ்து அழகிய மணவாள ஜீயர், அண்ணராய சக்ரவர்த்தி, மேல்நாட்டுத் தோழப்பர் நாயனார் முதலானவர்கள். இவர் செய்தருளின க்ரந்தம் அந்திமோபாயநிஷ்டை. திருநாமங்கள் பூர்வாஶ்ரமத்தில் கோவிந்ததாஸரப்பன், கோவிந்தர், ப₄ட்டநாத₂ர், பின்பு பட்டர்பிரான் ஜீயர், ப₄ட்டநாத₂முனி இத்யாதி₃கள்.

இவருக்குத் தனியன்

93. ரம்யஜாமாத்ருயோகீ₃ந்த்₃ரபாத₃ ஸேவைகதா₄ரகம் ।
ப₄ட்டநாத₂முநிம் வந்தே₃ வாத்ஸல்யாதி₃ கு₃ணார்ணவம் ॥

திருவேங்கடஜீயருக்குத் திருவவதார ஸ்த₂லம் திருமலை. ஆசார்யர் பெரியஜீயர். திருநாமங்கள் வேங்கடயோகி₃, திருவேங்கடஜீயர், திருவேங்கட ராமாநுஜஜீயர்.

கோயில் கந்தாடை அண்ணனுக்குத் திருவவதார ஸ்த₂லம் கோயில். திருநக்ஷத்ரம் புரட்டாசி மாஸத்தில் பூரட்டாதி. ஆசார்யர் பெரிய ஜீயர். சிஷ்யர் கோயில் கந்தாடை அப்பன், நாயன், பிள்ளை அப்பா முதலானவர்கள். திருநாமங்கள் அண்ணன், வரதநாராயணன்.

இவருக்குத் தனியன்

94. ஸகலவேதா₃ந்த ஸாரார்த்த₂பூர்ணாஶயம்
விபுலவாதூ₄லகோ₃த்ரோத்₃ப₄வாநாம் வரம் ।
ருசிரஜாமாத்ருயோகீ₃ந்த்₃ரபாதா₃ஶ்ரயம்
வரத₃நாராயணம் மத்₃கு₃ரும் ஸம்ஶ்ரயே ॥

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணாவுக்குத் திருவவதார ஸ்த₂லம் பெருமாள் கோயில். திருநக்ஷத்ரம் ஆடி மாஸத்தில் பூசம். குடி முடும்பை. ஸ்ரீவத்ஸகோத்ரம். யஜுஶ்ஶாகை. பஞ்ச ஸம்ஸ்காரங்களும் ஸ்ரீபாஷ்யமும் ஸாதித்தருளின ஆசார்யர் வேதாந்தாசார்யர் குமாரரான நாயனார். சிஷ்யர் குமாரர் அண்ணனப்பா, அநந்தாசார்யர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். திருநாமங்கள் ஹஸ்திகி₃ரிநாத₂ர்,

அண்ணா, ப்ரதிவாதிபயங்கரர், பரவாதி பயங்கரர் இத்யாதிகள்.

இவருக்குத் தனியன்

95. வேதாந்ததேசிககடாக்ஷவிவ்ருத்தபோதம்
காந்தோபயந்த்ருயமிந: கருணைகபாத்ரம் |
வத்ஸாந்வவாயமநவத்ய குணைருபேதம்
பக்த்யா பஜாமி பரவாதி பயங்கரார்யம் ||

எறும்பியிலப்பாவுக்குத் திருவவதார ஸ்தலம் எறும்பி. திருநக்ஷத்ரம் ஐப்பசி மாஸத்தில் ரேவதி. குலம் வடமாள். குடி முடும்பை, ஸ்ரீவத்ஸகோத்ரம், ஆபஸ்தம்பஸூத்ரம். திருவாராதனம் சக்ரவர்த்தித் திருமகனார். திருத்தகப்பனார் பெரியஶரண்யாசார்யர். ஆசார்யர் பெரிய ஜீயர். சிஷ்யர் குமாரர் பெரியவப்பா. இவர் செய்தருளின க்ரந்தங்கள் வரவரமுநிசரிதம், பூர்வதினசர்யை, உத்தரதினசர்யை முதலானவை. திருநாமங்கள் அப்பா, தேவராஜர்.

இவருக்குத் தனியன்

96. ஸௌம்யஜாமாத்ருயோகீந்த்ரசரணாம்புஜஷட்பதம் |
தேவராஜகுரும் வந்தே திவ்யஜ்ஞாந ப்ரதம் ஶுபம் ||

அப்பிள்ளை ஜீயர் நியமனத்தாலே ஐந்து திருவந்தாதிக்கும் உரையருளிச்செய்து யதிராஜவிம்ஶதிக்குப் பரக்க வ்யாக்யானமருளிச்செய்தார்.

இவருக்குத் தனியன்

97. காந்தோபயந்த்ருயோகீந்த்ரசரணாம்புஜஷட்பதம் |
வத்ஸாந்வயபவம் வந்தே ப்ரணதார்த்திஹரம் குரும் ||

அப்பிள்ளானுக்குத் திருவாராதனம், ஆசார்யர் பெரிய ஜீயர்.

இவருக்குத் தனியன்

98. காந்தோபயந்த்ருயோகீந்த்ர ஸர்வகைங்கர்யதுர்வஹம் |
ததேகதைவதம் ஸௌம்யம் ராமாநுஜகுரும் பஜே ||

கந்தாடை போரேற்றுநாயனாருக்கு ஆசார்யர் பெரிய ஜீயர். ஸ்ரீபாஷ்யம் ப்ரஸாதித்தருளினவர் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா.

acharya.org

இவருக்குத் தனியன்

99. ஶமத3மாதி3 கு3ணாகரம் நிகேதநம்
சரமபர்வணி நிஶ்சலசேதஸம் ।
யதிவராங்க்4ரிஸரோருஹ ஷட்பத3ம்
ஸமரபுங்க3வஸத்3கு3ரு மாஶ்ரயே ॥

ஏட்டூர் சிங்கராசார்யருக்குத் திருவவதார ஸ்த2லம் ஏட்டூர் திருநக்ஷத்ரம் ஆடிமாஸம் உத்தரட்டாதி. திருத்தகப்பனார் திருமலைநம்பி வம்ஶ்யரான ஏட்டூர் ஸ்ரீநிவாஸாசார்யர். திருக்குமாரர் ஏட்டூர் வேங்கடாசார்யர். திருப்பேரனார் அத்தங்கி சிங்கராசார்யர். குலம் வடமாள். குடி சொட்டை. ஶட2மர்ஷண கோ3த்ரம். யஜுஶ்ஶாகை2. திருநாமங்கள் ந்ருஸிம்ஹகு3ரு, பஞ்சாநநப்ரியதே3ஶிகர், குமாரதாதாசார்யர். பஞ்சஸம்ஸ்காரங்களும், ஸ்ரீப4ாஷ்யமும், ஸ்ரீராமாயணாதி3களும் ஸாதித்த ஆசார்யர் திருத்தகப்பனார். ஈடு முதலான வ்யாக்2யானங்களும், ரஹஸ்யக்3ரந்த2ங்களும் ஜீயர் ஸந்நிதி4யிலே. சிஷ்யர்கள் - குமாரர், எங்களாழ்வான் வம்ஶ்யரான ராமாநுஜாசார்யர், சேஷய்யங்கார் முதலானவர்கள். திருவாராதனம் அழகியசிங்கர், மலைகுனியநின்றானும், வெண்ணெய்க்காடும் பிள்ளையும், "எம்பெருமானாருக்கு உகப்பாக, ஜ்ஞானபுத்ர வம்ஶ்யரான நீர் ஒரு வ்யாக்யானம் செய்யும்" என்று நியமிக்கையாலே, ராமாநுஜ நூற்றந்தாதிக்கு வ்யாக்2யானம் செய்தருளினார். ஜீயருக்கு தாத3வம்ஶ்யரென்று இவரிடத்தில் விஶேஷாத3ரம் நடந்து போரும்.

இவருக்குத் தனியன்

100. ஸௌம்யஜாமாத்ருயோகீ3ந்த்3ர பாத3பங்கேருஹாஶ்ரயம் ।
ஸ்ரீஶைலநரஸிம்ஹார்யம் வந்தே3 ஸத்3கு3ணஸாக3ரம் ॥

ஜீயர் நாயனாருக்குத் திருத்தகப்பனார் - பெரியஜீயர் பூர்வாஶ்ரமத்தில் குமாரர் ராமாநுஜாசார்யர். திருவாராத4னமும் ஆசார்யரும் பெரியஜீயர். இவருக்குத் திருவாய்மொழியீட்டை ப்ரஸாதி3த்தருளினவர் கோயில் கந்தாடை அண்ணன். ஸ்ரீப4ாஷ்யம் ப்ரஸாதி3த்தருளினவர் ப்ரதிவாதி3

acharya.org

பயங்கரம் அண்ணா. திருநாமங்கள் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ஜீயர் நாயனார், அபி₄ராமவரர் இத்யாதி₃கள்.

இவருக்குத் தனியன்

101. அஸ்மாஸு வத்ஸலதயா க்ருபயா ச பூ₄ய:
ஸ்வேச்ச₂யாவதீர்ணமிவ ஸௌம்யவரம் முநீந்த்₃ரம் ।
ஆசார்ய பௌத்ர மபி₄ராம வராபி₄தா₄நம்
அஸ்மத்₃கு₃ரும் பரமகாருணிகம் ப₄ஜாமி ॥

கோயில்கந்தாடை அப்பன் தனியன்

102. வரத₃கு₃ரு சரண ஶரணம்
வரவர முநிவர்யக₄நக்ருபா பாத்ரம் ।
ப்ரவரகு₃ணரத்ந ஜலதி₄ம்
ப்ரணமாமி ஸ்ரீநிவாஸகு₃ருவர்யம் ॥

ஆத்தான் ராமாநுஜபிள்ளைக்குக் குடி முடும்பை. ஸ்ரீவத்ஸ கோத்ரம், யஜுஶ்ஶாகை. திருநக்ஷத்ரம் பங்குனியில் புனர்பூசம்.

இவருக்குத் தனியன்

103. வந்தே₃ வாநமஹாஶைல ராமாநுஜ முநிப்ரியம் ।
ராமாநுஜார்யம் ஸர்வஜ்ஞம் வத்ஸாந்வய விபூ₄ஷணம் ॥

பரவஸ்து அண்ணனுக்குக் குடி ஆனியூர். குலம் வடமாள். கௌ₃ர்க்க₃கோ₃த்ரம். யஜுஶ்ஶாகை. திருநக்ஷத்ரம் தை மாஸத்தில் புனர்பூசம். திருத்தகப்பனார் நடுவிலாழ்வான் வம்ஶ்யரான ஆனையூரழகிய மணவாளர் குமாரர் திருவாய்மொழிப் பெருமாள் நாயனார். இவர் ஸ்வீக்ருத புத்ரர். சிஷ்யர் முடும்பை பட்டர்பிரான் ஜீயர் முதலானவர்கள்.

பரவஸ்து அழகிய மணவாள ஜீயருக்குத் திருவவதார ஸ்த₂லம் திருமலை திருப்பதி. திருநக்ஷத்ரம் ஆனியில் அஶ்வினி. குலம் வடமாள். பாரத்வாஜகோ₃த்ரம். ஸாமஶாகை. திருத்தகப்பனார் கோவிந்ததாஸரப்பனுக்குப் பித்ருவ்ய புத்ரரான கோயிலப்பன். தமையனார் கோயிலப்பன். ஆசார்யர் பட்டர்பிரான்ஜீயர். ஸ்ரீபாஷ்யத்தையும், திருவாய்மொழியின் சட்டையும் ப்ரஸாதித்தருளினவர்

acharya.org

ப்ரதிவாதி₃ ப₄யங்கரம் அண்ணா, மூவாயிர வ்யாக்₂யானங்களும், ரஹஸ்ய வ்யாக்யானங்களும் ப்ரஸாதித்தருளினவர் பரவஸ்து அண்ணன், சிஷ்யர் அண்ணன் குமாரரான திருவாய்மொழிப் பெருமாள் நாயனார், கோவிந்ததாஸரப்பன், திருப்பேரனாரான பெருமாளய்யங்கார் முதலானவர்கள். இவர் செய்தருளின க்₃ரந்த₂ங்கள் கு₃ருமுக்தாவளி, ப₄ட்டநாத₂ப்ரப₄ாவம் முதலானவை.

இவருக்குத் தனியன்

104. ஸ்ரீப₄ட்டநாத₂ முநிவர்யலஸத்க்ருபாபா:
பாத்ரம் ப்ரஶாந்தமபி₄ராமவரம் முநீந்த்₃ரம் ।
ப்ரஜ்ஞாநப₄க்தி விரதி ப்ரமுகை₂ருதா₃ரை:
பூர்ணம் ஸதா₃ ப₄கவதா₃ர்த்தி நிதி₄ம் ப₄ஜாம: ॥

சுத்தஸத்வம் அண்ணனுக்குத் திருவாய்மொழியின் ஈடு ப்ரஸாதி₃த்தவர் வானமாமலை ஜீயர். பொழில்பாக்கத்துப் போற்றிநாயனாருக்கும் அப்படியே.

கோயில் கந்தாடை நாயனுக்குத் திருத்தகப்பனார் கோயில் கந்தாடை அண்ணன். திருநக்ஷத்ரம் மார்கழியில் உத்தரட்டாதி.

இவருக்குத் தனியன்

105. ஸ்ரீமத்₃வாதூ₄ல வரத₃நாராயண கு₃ரோஸ்ஸுதம் ।
ஸர்வஜ்ஞம் ஸர்வஸுலப₄ம் ஸ்ரீநிவாஸகு₃ரும் ப₄ஜே ॥

இவர்தான் இப்பெரிய திருமுடியடைவை அருளிச்செய்தவர்.

கோயில் கந்தாடைநாயன் அருளிய பெரியதிருமுடி யடைவு

ஸம்பூர்ணம்

acharya.org

ஸ்ரீ:

பெரியதிருமுடியடைவு ப்ரமாணத்திரட்டு

1. ஸ்புரத்கிரீடாங்கதஹாரகண்டிகா
மணீந்த்ரகாஞ்சீகுணநூபுராதிபி: ।
ரதாங்கஶங்காஸிகதாதநுர்வரைர்
லஸத்துலஸ்யா வநமாலயோஜ்ஜ்வலம் ॥

[பிரகாசிக்கிற கிரீடம், தோள்வளைகள், ஹாரம், திருக் கழுத்தணி ஸ்ரீகௌஸ்துபம், திருவரைநாண், திருச்சிலம்பு முதலிய திருவாபரணங்களாலும், சக்கரம், சங்கும், வாள், கதை, வில் என்னும் ஆயுதங்களாலும் (உன் சேர்த்தி யாலே) பிரகாசிக்கும் திருத்துழாயை உடைய வனமாலை யாலும் பிரகாசிப்பவனே.]

2. ஸ்வோசிதவிவித விசித்ராநந்தாஶ்சர்ய நித்ய நிரவத்ய நிரதிஶய ஸுகந்த நிரதிஶய ஸுகஸ்பர்ஶ நிரதிஶயௌஜ்ஜ்வல்ய கிரீட மகுட சூடாவதம்ஸ மகரகுண்டல க்ரைவேயக ஹார கேயூர கடக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தாதாமோதர பந்தந பீதாம்பர காஞ்சீகுண நூபுராத்யபரிமித திவ்ய பூஷண!

[தனக்குச் தக்கவையாய், பலவிதமானவையாய், விசித்ர மானவையாய், எல்லையற்ற ஆஶ்சர்யத்தை உடையவை யாய், நித்யமானவையாய், குற்றமற்றவையாய், மிகச்சிறந்த நறுமணமுடையவையாய், மிகச்சிறந்த மென்மை உடைய வையாய், மிகச்சிறந்த ஒளியுடையவையான கிரீடம், மகுடம், திருச்சுட்டி, திருச்செவிமலர், மகரகுண்டலங்கள், திருக்கழுத்தணி, ஹாரம், திருத்தோள்வளை, முன்கைவளை, ஸ்ரீவத்ஸமென்னும் திருமறு, ஸ்ரீகௌஸ்துபம், திருமுத்து வடங்கள், திரு உதரபந்தனம், பீதாம்பரம், அரை நூல் பட்டிகை, திருச்சிலம்பு முதலான எண்ணிறந்த திவ்யா பரணங்களை உடையவனே!]

3. குரு-ப்ர-212.

4. (இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமாக உள்ள) அது அனைத்தையும் உள்ளும், புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்.

---

1. ஸ்தோ-ர-36. 2. ஶரணாகதிகத்யம்-5 4. தை-நா-11

acharya.org

5. எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் இருக்கும் ஈசனை.

6. ஸ்ரீரங்கத்திற்கு மங்களமணி போன்றிருக்கும் ஸ்ரீரங்கநாதனையும், கருணைநீர்க்கு இருப்பிடமாய், திருவேங்கடமலையின் உச்சியிலிருக்கும் கார்மேகம் போன்றவனை திருவேங்கட முடையானையும், அத்திகிரியின் உச்சியில் விளங்கும் பாரிஜாதம் போன்றவனாய், பெருந்தேவியின் நாயகனான பேரருளாளனையும், யாதுகிரிக்குன்றிலிட்ட விளக்குப்போன்ற திருநாரணனையும் தலையால் வணங்குகிறேன்.

7. பரமபதத்தில் உள்ள அந்த விரஜா நதியே இங்கு காவேரிநதியாய் உள்ளது. வைகுண்டமே திருவரங்கம் பெரிய கோயிலாய் உள்ளது. அந்தப் பரவாஸுதேவனே ரங்கநாதனாக இருக்கிறான். இவ்வண்ணமாக ஸ்ரீரங்கம் நேரே காணும் பரமபதமாய் உள்ளது.

8. லக்ஷ்மீ தேவியாகிற கற்பகக் கொடியின் உயர்ந்த ஸ்தனங்களாகிற பூங்கொத்துக்களில் ஸஞ்சரிக்கும் ஸ்ரீரங்கராஜனாகிற வண்டு என் மனத்தாமரையில் விளையாடக் கடவது.

9. எவருடைய புருவநெரிப்பின் தாரதம்யத்தாலே ஒருவன் அடிமையாகவும், மற்றொருவன் ஆண்டானாகவும் வேறுபட்டிருக்கையாகிற மேடு பள்ளமுடையதாக இவ்வுலகம் விளங்குகிறதோ, அத்தகைய ஸ்ரீரங்கநாச்சியாருக்கு நமஸ்காரம்.

10 ஸ்ரீரங்க சந்திரனைப் பெரிய பிராட்டியாரோடு விளையாட விட்டு விட்டு, எல்லாச் சேதநாசேதனங்களையும் நியமிக்கும் அதிகாரத்தைத் தம் அங்குளிமுத்திரையாலேயே எவர் நிர்வஹிக்கிறாரோ, அந்த ஸேனை முதலியாரை வேறு புகலற்றவர்களாய் அடிபணிந்தோம்.

11. கு-ப்ர-48.

---

5. யதிராஜவிம்சதி 12. 6. 7.
8. ர-ஸ்த 1—10. 9. ர-ஸ்த 1-7, 10. ர-ஸ்த 1-50.

இனி எல்லா ப்ரமாணங்களும் ஒவ்வோராழ்வார்கள் ஆசார்யர்களின் தனியன்கள். ஆகரமுள்ளவற்றுக்குத் தரப்படும்.

acharya.org

12. கு-ப்ர-53.
13. ,, 57.
14. ,, -77.
15. சரமோபாய நிர்ணய ப்ரமாணத்திரட்டு-41.
16. கு-ப்ர-100.

17. அரசனால் கல்பிக்கப்பட்ட பொற்கிழியைக் கைப் பற்றுவதற்காக குருமுகமாக ஓதாமலே எல்லா வேதங்களை யும் முழங்கியவராய், ரங்கநாதனுக்கு நேரே மாமனாராய், அந்தணர் தலைவரான அந்தப் பெரியாழ்வாரை வணங்கு கிறேன்.

18. நீளாதேவியின் உயர்ந்த திருமுலைத்தடங்களாகிற மலையில் உறங்கும் கண்ணனை உணர்த்தி, கணக்கற்ற வேதவாக்யங்களினின்றும் தேறும் தன் பாரதந்த்ரியத்தை அவனுக்கு ஓதுவித்தவளாய், தான் சூடிக்களைந்த மாலை யால் கட்டப்பட்ட அவனை வலியச்சென்று அனுபவித்த வளான அந்த கோதாதேவிக்கு மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம்.

19. அரசனைப்போல் உபசரிக்கத்தக்க ரங்கநாதனையே அந்தப் பரவாஸுதேவனாக எண்ணித் திருப்பள்ளியெழுச்சி யாகிற திவ்யப்ரபந்தத்தைப் பாடியருளிய தொண்டரடிப் பொடிகளைத் துதிக்கிறேன்.

20. கு-ப்ர-165.

21. இரண்டு காவேரிகளுக்கும் நடுவில் திருவரங்கத்தில் சயனித்திருக்கும் அரங்கனை அனுபவித்துப் பேரானந்த மடைந்த நெஞ்சையுடையவராய், வேறு எந்த விஷயத்தை யும் தன் கண்கள் காணமாட்டா என எவர் அறுதியிட் டாரோ, அத்தகைய முனிவாஹனரை மனனம் செய்கிறோம்.

22. எவருடைய ஒளிமிக்க வாக்குகளாகிற கிரணங் களாலே அஜ்ஞானத்தினால் ஏற்படும் உள்ளிருள் அழிந் ததோ, அத்தகைய கவிலோக ஸூர்யனை கலிகன்றியை தியானிக்கிறேன்.

23. கு-ப்ர-202.

24. (இப்படிப்பட்டதென்று) நினைக்கமுடியாததும், ஆஶ்சர்யமானதும், (பகவானுடைய அருளாலே) எளிதாகக் கிடைத்ததுமான ஞானத்தினுடையவும், வைராக்யத்தினுடையவும், கடலைப் போன்றவராகவும், பகவானை மனனம் செய்பவராகவும் ஆழ்ந்த பகவத் பக்திக்கு கடலாகவுமிருக்கிற நாதமுனிகளுக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

25. நாதமுனிகளின் நினைவில் நிலைநிற்பவரும், ஶுத்தஸத்வமயராயிருப்பவரும், பகவானுடைய மற்றொரு அவதாரம் போன்றுள்ளவருமான புண்டரீகாக்ஷரை (உய்யக்கொண்டாரை) வணங்குகிறேன்.

26. கு-ப்ர-260.

27. நாதமுனிகளுடைய திருவடியில் ஈடுபட்டவராய், ஜ்ஞானயோக பக்தியோகச் செல்வங்களை உடையவரான குருகைக்காவலப்பன் என்னும் யோகீஶ்வரஶ்ரேஷ்டரை எப்போதும் தலையால் வணங்குகிறேன்.

28. (பரசுராமனைப்போல்) பொறுமையை (பூமியை) விடாதவராய், (ராமனைப்போல) புண்யஜனங்களை (ராக்ஷஸர்களை) பாதிக்காதவராய், (பலராமனைப்போல்) மது பானமத்தும் இல்லாதவரான நாலாவது ராமனை (மணக்கால்நம்பியை) உபாஸிக்கிறோம்.

29 பகவத் பக்தியாகிற பாற்கடலில் குடைந்தாடப் பெற்றவராய், (அதனால்) ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் மூன்று தாபங்களும் ஆறப் பெற்றவரான ஸ்ரீராமன் என்னும் மணக்கால் நம்பியை ஆஶ்ரயிக்கிறேன்.

30. கு-ப்ர-300.

31. ஸ்ரீராமமிஶ்ரராம் மணக்கால் நம்பியின் திருவடித் தாமரையில் வண்டாயிருப்பவரும், ஸ்ரீயாமுநாசார்யருடைய சிறந்த புத்திரரும், குணத்தில் மிக்கவரும், ஸ்ரீரங்கராஜ கருணையினாலே அளிக்கப்பெற்றவரும், ஸ்ரீபாஷ்யகாரரை

24. ஸ்தோத்ரரத்னம்-1, 25. யதிராஜஸப்ததி-6,
28. யதிராஜஸப்ததி-7,

சிஷ்யராகக் கொண்டவருமான திருவரங்கப்பெருமாளரை யரைத் துதிக்கிறேன்.

32. ஒன்றியொன்றி உலகம் படைத்த விஷ்ணுவின் (சேதநலாப) மநோரதம் எவராலே நிறைவேற்றிவைக்கப் பட்டதோ, கருணை நிரம்பியவரும், யதிராஜருடைய ஆசார் யருமான அத்தகைய பெரியநம்பிகளை ஆச்ரயிக்கிறேன்.

33. கு-ப்ர-392.

34. (பிரமனுக்குத் தந்தையான திருவேங்கடமுடை யானாலே 'அப்பா' என்று கூப்பிடப்பெறுகையாலே) உல கிற்குப் பாட்டனை பிரமனுக்கும் பாட்டனாராய், ஸ்ரீ பாஷ்ய காரருக்குச் சிறந்த ஆசார்யராய், அவருக்கு வால்மீகியின் வாக்காகிற ஸ்ரீராமாயணத்தின் பொருளை உபதேசித்தவ ரான பெரிய திருமலைநம்பிக்குப் பலகால் வணக்கம்.

35. கு-ப்ர-395.

36. பக்தர்களுக்கு அமுதம் போன்றவராய், கேட் பார்களுக் கேட்டதைக் கொடுக்கும் கற்பகவ்ருக்ஷமாய், யாமுநாசார்யரின் திருவடியில் அன்புகொண்டவராய், ஸ்ரீபாஷ்யகாரருக்குத் திருவாய்மொழியின் பொருளாகிற பரமஹிதத்தை உபதேசித்தவராய், நல்லறிவு மிக்கவரான திருமாலையாண்டானைத் தலையாலே வணங்குகிறேன்.

37. யாமுநாசார்யருடைய நல்ல சீடரும், திருவரங்கம் பெரியகோயிலிலே வாழ்பவரும், ஞானம், பக்தி முதலான வற்றுக்குக் கடலாயிருப்பவருமான மாறனேரி நம்பியை பூஜனம் செய்கிறேன்.

38. ஸ்ரீவரதராஜனின் கருணைக்கு இருப்பிடமாய், மிகச் சிறந்தவராய், ராமாநுஜமுனிக்கும் மதிக்கத்தக்கவராய், நல்லோர்கள் சென்று சேருமிடமான திருக்கச்சி நம்பியை வணங்குகிறேன்.

39. கண்ணனின் அவதாரத்தால் மதுரையைப்போல வும், ராமனின் அவதாரத்தால் அயோத்தியைப்போலவும்,

32. யதிராஜஸப்ததி-9.

acharya.org

கருணைகோர் இருப்பிடமான யதிராஜருடைய அவதாரத்தால் ஸ்ரீபெரும்பூதூர் மிகப் புண்ணியமான நகரமாயிற்று.

40. கு-ப்ர-170.

41 கு-ப்ர-403 [சில பாடபேதங்களுடன் உள்ளது. 'எழுநூறு யதிகளாலும்' என்றவிடத்தில், 'பன்னீராயிரம் ஏகாந்திகளாலும்' என்று பொருள்கொள்வது.]

42 கு-ப்ர-406.

43. கு-ப்ர-503.

43* கு-ப்ர-498.

43† கு-ப்ர 414.

43§ திருக்கோட்டியூர் நம்பியின் நல்ல பிள்ளையாய், யதிராஜரின் திருவடிகளை அடைந்தவராய், காஶ்யப கோத்ரத்தில் உதித்தவரான நாராயணன் என்னும் திருநாமமுள்ள தெற்காழ்வானை ஆஶ்ரயிக்கிறேன்.

44 பெரிய திருமலை நம்பியின் நல்ல பிள்ளையாய், இளையாழ்வாரான உடையவரின் திருவடிகளை ஆஶ்ரயித்தவராய், திருமலைக் குடியில் அவதரித்தவரான பிள்ளை திருமலை நம்பியை ஆஶ்ரயிக்கிறேன்.

45 பாரத்வாஜ குலத்துதித்தவராய், ராமாநுஜ முனிவரின் திருவடிகளை ஆஶ்ரயித்தவராய், கருணைக்கோர் இருப்பிடமான வங்கிபுரத்து நம்பியை வணங்குகிறேன்.

46. எம்பெருமானாருடைய நல்லசீடராய், ஸாளக்ராமம் என்னும் ஊரில் வாழ்ந்தவராய், ஐந்தாம் உபாயமான ஆசார்யநிஷ்டை கைவரப்பெற்றவரான ஸாளக்ராம ஐயன் எனப்படும் வடுக நம்பியை ஆஶ்ரயிக்கிறேன்.

47. பாரத்வாஜ குலத்தில் உதித்தவராய், பெரியநம்பிகளின் திருக்குமாரராய், எம்பெருமானாரை ஆஶ்ரயித்தவரான ஸ்ரீபுண்டரீகாக்ஷரை வணங்குகிறேன்.

48. திராவிடவேதத்தின் ஸாரத்தை அறிந்தவராய், எம்பெருமானாரின் திருவடிகளை ஆஶ்ரயித்தவராய், பேரறி

acharya.org

வாளரான திருக்குருகைப் பிரான் பிள்ளானைத் தினந்தோறும் தலையால் வணங்குகிறேன்.

49. திருமாலையாண்டானின் திருக்குமாரராய், எம்பெருமானாரின் நல்ல சீடராய், சிறந்த கருணைக்கு இருப்பிடமான சுந்தரத்தோளுடையார் என்னும் ஆசார்யரை வணங்குகிறேன்.

50. கு ப்ர-526.

51. ஸ்ரீபாஷ்யகாரருக்கு நல்ல சீடராய், கமலநயன பட்டருடைய குமாரராய், எம்பாரின் தம்பியாய், கருணைக்கு இருப்பிடமான சிறிய கோவிந்தப் பெருமாளை வணங்குகிறேன்.

52. ஸ்ரீரங்கத்தில் பங்குனி ஹஸ்தத்தில் அவதரித்தவராய், அணியரங்கத்தமுதனாரின் குமாரராய், எம்பெருமானாரின் திருவடியைப் பற்றியவரான திருவரங்கத்தமுதனாரை ஆஶ்ரயிக்கிறேன்.

53. எம்பெருமானாருடைய நல்ல சீடராய், வேத ஶாஸ்த்ரார்த்தப் பொருள்களைச் செல்வமாக உடையவராய், ஸந்யாஸாஶ்ரமத்தை உடையவரான தேவராஜ முனிவர் என்னும் அருளாளப் பெருமாள் எம்பெருமானாரை ஆஶ்ரயிக்கிறேன்.

54. ஜ்ஞாநவைராக்யம் நிறைந்தவராய், எம்பெருமானாரின் திருவடிகளைப் பற்றியவராய், நாலாவது ஆஶ்ரமமாகிய ஸந்யாஸத்தை ஏற்றுக்கொண்டவரான முனிவர் தலைவராம் ஆட்கொண்ட வில்லிஜீயரை வணங்குகிறேன்.

55. (எதிரிடும்) கவிகளுக்கும், தார்க்கிகர்களுக்கும் சிங்கம் போன்றவராய், (ஜ்ஞாநம், பக்தி, வைராக்யம் முதலான) செல்வங்கள் நிறைந்தவராய், 'வேங்கடநாதன்' என்னும் திருநாமமுடையவரான ஸ்ரீவேதாந்ததேசிகர் என் நெஞ்சில் எப்போதும் வாழ்வாராக.

56. ஸ்ரீராமமிஶ்ரர் என்னும் கூரத்தாழ்வாருக்குப் பேரனாய், ஸ்ரீவத்ஸாங்கர் என்னும் கூரத்தாழ்வானுக்குப்

acharya.org

பிள்ளையாய், ஸ்ரீபராஸரபட்டருக்குத் தம்பியான ஸ்ரீராமப் பிள்ளையை ஆஸ்ரயிக்கிறேன்.

57. ஸ்ரீபராசரபட்டருடைய கருணையினால் பெற்ற உண்மையறிவையுடையவராய், ஸம்ப்ரதாய ப்ரவர்த்தக ராய், ஸ்ரீராமப்பிள்ளையின் குமாரரான வாக்கினால் வென்றார் பட்டருக்கு அடிமை செய்கிறேன்.

58. கூரகுலத்திற்குத் தலைவராய், மிகச்சிறந்தவராய், எம்பெருமானார் அருளிய ஸ்ரீபாஷ்யத்தின் பொருள்களை (ஸ்ருதப்ரகாசிகையால்) விரித்துக்காட்டியவரான ஸுதர்ஶந பட்டரை வணங்குகிறேன்.

59. கு-ப்ர-543.

60. ஸ்ரீபராசரபட்டரின் சீடராய், திருவரங்கம் பெரிய கோயிலை ரக்ஷிப்பவராய், ஞானம் முதலான குணங்களுக்குக் கடலாயிருப்பவரான நலந்திகழ் நாராயண ஜீயரை வணங்கு கிறேன்.

61. கு-ப்ர-553.

62. வேதாந்திநஞ்சீயராகிற அமுதக் கடலினின்றும், மிகச் சிறந்ததான வேதப்பொருளமுதப் [பெருக்கைப் பருகிப் பொழிபவராய், கருணை (நீர்) நிறைந்த (மேகம் போன்ற)வரான திருக்கலிகன்றிதாஸராம் நம்பிள்ளையைச் சரணடைகிறேன்.

63. 'ராமாநுஜர்' என்னும் திருநாமமுள்ள கந்தாடை யாண்டானின் நல்ல பிள்ளையாய், உலகாசிரியரான நம் பிள்ளையின் கருணைக்குப் பாத்திரராய், நற்குணக்கடலான வாரணாதீஶரை (கந்தாடை தோழப்பரை) வணங்குகிறேன்.

64. வாதூலகுலத்தில் உதித்தவராய், பச்சைவாரணப் பெருமாளின் பிள்ளையாய், கந்தாடையாண்டானின் பேரனான ஈயான் எனப்படும் ராமாநுஜாசார்யரை வணங்குகிறேன்.

65. வாதூல குலத்துக்கு ஆபரணமாயிருப்பவராய், ஈயானின் குமாரராய், ஜ்ஞாந வைராக்யங்கள் நிறைந்த வரான திருக்கோபுரத்து நாயனாரை வணங்குகிறேன்.

acharya.org

65. வாதூல குலக்கொழுந்தாய், திருக்கோபுரத்து நாயனாரின் குமாரராய், உபயவேதாந்தச் செல்வமுடையவரான தெய்வப்பெருமாள் தோழப்பரை வணங்குகிறேன்.

66. வாதூலகுலவிளக்காய், தெய்வப்பெருமாள் தோழப்பருடைய நல்ல குமாரராய், ஞானம் முதலான குணங்களுக்குக் கடலான தேவராஜ தோழப்பரை வணங்குகிறேன்.

67. உலகாசியரான நம்பிள்ளையின் திருவடிகளில் ஈடுபட்டவராய், நடுவில் திருவீதியில் வாழ்பவராய், கூரத்தாழ்வானுடைய குலமாகிய கடலுக்குச் சந்திரன் போன்றவரான நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரை ஆஶ்ரயிக்கிறேன்.

68. ஞானமும், வைராக்யமும் நிறைந்தவராய், திராவிட வேதமான திருவாய்மொழியின் பாஷ்யத்தை அளித்தவராய், என் ஆசார்யரான பின்பழகிய பெருமாள் ஜீயரை ஆஶ்ரயிக்கிறேன்.

69. உலகாரியரான நம்பிள்ளையின் திருவடித்தாமரையைப் பற்றியவராய், கருணைக்கடலாய், உபயவேதாந்தச் செல்வமுடையவரான (ஈயுண்ணி) மாதவாசார்யரை ஆஶ்ரயிக்கிறேன்.

70. (ஈயுண்ணி) மாதவரின் நல்ல குமாரராய், அவருடைய திருவடித்தாமரையில் ஆஶ்ரயித்தவராய், வாத்ஸல்யம் முதலான குணங்களையுடையவரான (ஈயுண்ணி) பத்மநாபாசார்யரை ஆஶ்ரயிக்கிறேன்.

71. நாலூரானின் வம்ஶத்தில் உதித்தவராய், (எம்பெருமானாரின் சீடரான) எச்சான் எனப்படும் யஜ்ஞேஶரின் குலத்திற்குத் திலகமாய், திராவிட வேதப்பொருளை அறிந்தவரான ஸ்ரீவராஹர் எனப்படும் நாலூர்ப்பிள்ளையை ஆஶ்ரயிக்கிறேன்.

72. நாலூரில் வாழ்பவரும், ராமாநுஜார்யர் எனப்படும் நாலூர்ப் பிள்ளையின் குமாரரும், குணமுடையவருமான தேவராஜர் எனப்படும் நாலூராச்சான் பிள்ளைக்கு வணக்கம்.

73. ஆசார்யஹ்ருதயத்தின் பொருள்களை வியாக்கியானமிட்டுக் காட்டியவராய், ஶ்ரிய:பதியின் தாஸராய்,

acharya.org

குற்றமற்றவரான தேவராஜரெனப்படும் திருநாராயணபுரத்தாரை ஆஶ்ரயிக்கிறேன்.

74. ஸ்ரீமத் வேதமஹாசார்யரின் திருவடித்தாமரையில் வண்டாயிருப்பவராய், தமிழ் வேதாந்த தேசிகரான இளம்பிளிசைப்பிள்ளை நூறாண்டு வாழ்வாராக.

75. ஸ்ரீரங்காசார்யரின் நல்ல குமாரராய், ஞானம் ஶமதமங்கள் முதலான குணங்களுக்குக் கடலாய், திராவிட வேதாந்தத்திற்கு ஆசார்யரான ஸ்ரீ கேசவாசார்யரை வணங்குகிறேன்.

76. ஸ்ரீமத் கேசவாசார்யரின் திருவடித் தாமரையில் வண்டாயிருப்பவராய், நல்ல திருவடிகளை (சீடர்களை) உடையவராய், தாயின் அடிமையைத் தகர்த்தெறிந்த கருடனின் திருநாமத்தை உடையவரான கருடாசார்யரை வணங்குகிறேன்.

77. கேசவாசார்யரின் நல்ல பிள்ளையாய், அவருடைய திருவடித் தாமரையை ஆஶ்ரயித்தவராய், தமிழ் வேதத்திற்கு ஆசார்யரான ஸ்ரீ நிவாஸாசார்யரை வணங்குகிறேன்.

78. குற்றமற்ற குணச் செல்வங்களுக்குக் கடைவீதியாயிருப்பவரும், ஸம்ஸாரத்தைக் கண்டு பயந்தவர்களுக்குப் புகலாயிருப்பவருமான (ஆதி) வண்சடகோபஜீயரை ஶரணடைகிறேன்.

79. வண்சடகோப ஜீயரின் திருவடியைப் பற்றியவராய், கருணைக்கோர் இருப்பிடமாய், (குணச்) செல்வமுடையவரான ஸ்ரீமந்நாராயண ஜீயரை ஆஶ்ரயிக்கிறேன்.

80. எவருடைய கடாக்ஷத்திற்கு இலக்கானவர்களுக்கு ஸ்ரீதரன் எப்போதும் கிடைத்தற்கெளியவனோ, அத்தகையவராய், யாமுநாசார்யரின் பிள்ளையாய், ஸ்ரீமத்க்ருஷ்ணர் என்னும் பெயரையுடையவரான பெரியவாச்சான்பிள்ளைக்கு வணக்கம்.

81. சரமோபாய நிர்ணயம் தனியன் காண்க.

82. பெரியவாச்சான்பிள்ளையின் திருவடித்தாமரையில் ஈடுபட்டவராய், நற்குணக்கடலாய், தமிழ்வேதத்துக்கு ஆசார்யரான ஸ்ரீரங்காசார்யரை வணங்குகிறேன்.

acharya.org

83. பரகாலதாஸரெனும் ரங்கராஜராால், அறிந்தபடியும் கேட்டபடியும் ஆசார்யஹ்ருதயத்தின் பொருள்கள் காட்டப் பட்டன.

84. ஸம்ஸாரக்கடலில் அமிழ்ந்த ஜந்துக்களைத் தாண்டு விக்கும் ஓடம் போன்றதான (வாதிகேஸரி) அழகியமண வாள ஜீயரின் திருவடித்தாமரையை சரணடைகிறேன்.

85. எவருடைய அருளின் பெருமையால் எனக்கு எல்லா ஸித்திகளும் கிடைத்தனவோ, அந்தகைய ஸ்ரீக்ருஷ்ணரெனும் வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருவடித் தாமரைகளைத் தலையால் எப்போதும் வணங்குகிறேன்.

86. ஸம்ஸாரமாகிற பாம்பினால் கடிக்கப்பட்ட ஜீவனுக்கு உயிர்தரும் மருந்தாயிருப்பவராய், வடக்குத்திருவீதிப்பிள்ளை யின் குமாரரான பிள்ளையுலகாசிரியராம் ஆசார்யருக்கு வணக்கம்.

87. ஆசார்ய பரம்பராப்ராப்தமான திராவிடவேத ஹ்ருதயம் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் குமாரரான அழகியமணவாளப்பெருமாள் நாயனாரால் காட்டப்பட்டது.

88. திருமலையாழ்வாராகிய திருவாய்மொழிப்பிள்ளைக் குத் தாமே வலியச்சென்றழைத்து நற்பொருள்களை உப தேசிக்கையாலே 'உதாரர்' என்னும் அடைமொழி பெற்றவரான கூரகுலோத்தமரை ஆச்ரயிக்கிறேன். பிள்ளை யுலகாசிரியரின் கிருபைக்குப் பாத்திரரும், கௌண்டின்ய குலத்திற்கு அலங்காரமாயிருப்பவரும், எல்லா ஆத்ம குணங்களுக்கும் இருப்பிடமானவருமான கூரகுலோத்தம தாஸரை வணங்குகிறேன்.

89. குந்தீநகரத்தில் பிறந்தவராய், (ஆசார்யனுடைய) அருளாலே கிடைக்கப்பெற்ற பரமப்ராப்யமான கைங்கர் யத்தை உடையவரான திருமலையாழ்வாரெனும் திருவாய் மொழிப்பிள்ளைக்கு வணக்கம்.

90 ஸ்ரீமானான மணவாளமாமுனிகள் பாஷ்யகாரரே யாக விளங்குபவர். அவர் பாஷ்யத்தை விவரிக்கும்போது கேட்கும் பேறுபெற்றவன் அடியேன்.

acharya.org

91. திருமலையாழ்வாராம் திருவாய்மொழிப்பிள்ளையின் தயைக்குப் பாத்திரராய், ஞானம், பக்தி முதலான குணங்களுக்குக் கடலாய், எம்பெருமானாரிடம் ஈடுபட்டவரான மணவாள மாமுனிகளை வணங்குகிறேன்.

92. மணவாள மாமுனிகளின் பாதரேகைபோன்றிருப்பவராய், எப்போதும் அவராலே தம் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளாம்படியிருப்பவரான வானமாமலை ஜீயரை ஆச்ரயிக்கிறேன்.

93. மணவாளமாமுனிகளின் பாதகைங்கர்யத்தையே தாரகமாகக் கொண்டவராய், வாத்ஸல்யம் முதலான குணங்களுக்குக் கடலாயிருப்பவரான பட்டநாத முனிவரை வணங்குகிறேன்.

94. எல்லா வேதாந்த ஸாரப்பொருள்களும் நிறைந்த திருவுள்ளத்தை உடையவரும், பெரிதான வாதூல கோத்ரத்தில் உதித்தவர்களுக்குள் சிறந்தவரும், மணவாள மாமுனிகளின் திருவடிகளை ஆச்ரயித்தவரும், என் ஆசார்யருமான வரதநாராயணரை (கோயில் கந்தாடை அண்ணனை) ஆச்ரயிக்கிறேன்.

95. வேதாந்ததேசிகரின் கடாக்ஷத்தாலே விரிவடைந்த அறிவையுடையவராய், மணவாள மாமுனிகளின் கருணைக்கு ஒரே பாத்திரமாயிருப்பவராய், ஸ்ரீவத்ஸ கோத்திரத்திலுதித்தவராய், குற்றமற்ற குணங்களையுடையவரான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவை பக்தியுடன் ஆச்ரயிக்கிறேன்.

96. மணவாள மாமுனிகளின் திருவடித்தாமரைகளில் வண்டாயிருப்பவராய், திவ்யஜ்ஞானமளிப்பவராய், மங்களமானவரான தேவராஜரெனும் எறும்பியப்பாவை வணங்குகிறேன்.

97. மணவாள மாமுனிகளின் திருவடித்தாமரைகளில் வண்டாயிருப்பவராய், ஸ்ரீவத்ஸகோத்ரத்திலுதித்தவரான ப்ரணதார்த்திஹரர் எனும் அப்பிள்ளையை வணங்குகிறேன்.

98. மணவாள மாமுனிகளுடைய எல்லாக் கைங்கர்யபாரங்களையும் தாமொருவரே வஹிப்பவராய், அவரையே

acharya.org

தெய்வமாகக் கொண்டவரான ராமானுஜரெனும் அப்பிள்ளானை ஆச்ரயிக்கிறேன்.

99. ஶமம், தமம் முதலான குணங்களுக்கு ஒரே இருப்பிடமாய், சரமபர்வமான ஆசார்யனிடம் அசையா ஈடுபாட்டையுடையவராய், யதிராஜரின் திருவடித்தாமரையில் வண்டாயிருப்பவரான கந்தாடை போரேற்று நாயனார் எனும் நல்லாசிரியரை ஆச்ரயிக்கிறேன்.

100. மணவாள மாமுனிகளின் திருவடித்தாமரையை ஆச்ரயித்தவராய், நற்குணக் கடலான ஸ்ரீசைலநரஸிம்ஹாசார்யரை வணங்குகிறேன்.

101. நம்மிடம் வாத்ஸல்யத்தாலும், கருணையாலும் மணவாள மாமுனிகள் தாமே விரும்பி மறுபடி அவதரித்தாரோ என்னலாம்படியிருப்பவரும், அம்மாமுனிகளின் திருப்பேரனாரும், பரம கருணையுடையவருமான அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் எனும் என் ஆசார்யரை ஆச்ரயிக்கிறேன்.

102. வரதநாராயண குருவென்னும் கோயில் கந்தாடையண்ணனின் திருவடிகளையே உபாயமாகக்கொண்டவரும், மணவாளமாமுனிகளின் பெருங்கருணைக்குப் பாத்திரமாயிருப்பவரும், சிறந்த குணங்களாகிற ரத்னங்கள் நிறைந்த கடலாயிருப்பவருமான ஸ்ரீநிவாஸாசார்யரென்னும் கோயில் கந்தாடை அப்பனை வணங்குகிறேன்.

103. வானமாமலை (ஆதி) ராமானுஜ ஜீயருக்கு இனியவரும், எல்லாமறிந்தவரும், ஸ்ரீவத்ஸ கோத்ரத்தை அலங்கரிப்பவருமான ஆத்தான் ராமாநுஜன் பிள்ளையை வணங்குகிறேன்.

104. பட்டர்பிரான் ஜீயருடைய விளங்கும் கருணைக்குப் பாத்திரமாயிருப்பவரும், மிகவும் சாந்தியுடையவரும், பெருத்த ஞானம், பக்தி, வைராக்யம் முதலான குணங்களால் மிகச்சிறந்து விளங்குபவரும், எப்போதும் எம்பெருமானைப் பெறவேணும் என்னும் ஆர்த்தி நிறைந்து விளங்குபவருமான பரவஸ்து அழகியமணவாளஜீயரை பூஜிக்கிறோம்.

acharya.org

105. ஸ்ரீமத்வாதூலகோத்ரத்திலுதித்த வரதநாராயண குருவாகிற கோயில் கந்தாடையண்ணனின் பிள்ளையும், எல்லாமறிந்தவரும், எல்லார்க்குமெளியவருமான ஸ்ரீநிவாஸாசார்யரென்னும் கோயில் கந்தாடை நாயனை பூஜிக்கிறேன்.

பெரியதிருமுடியடைவு ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

ஸ்ரீ:

பெரியதிருமுடியடைவு

ப்ரமாணங்களின் அட்டவணை

அ

அநுஜ்ஜ்ஞாதக்ஷமா 28
அந்தர்பஹிஸ்ச 4
அந்தர்பஹிஸ்ஸகல 5
அஸ்மாஸு 101

ஆ

ஆசார்யஹ்ருதய 73
ஆபாதசூட 21

ஏ

ஏகாந்திபிர் 41

க

கமலாபதிகல்யா 33
கலயாமிகலி 22
காஞ்ச்யாம்ஸரஸி 11
காந்தோபயந்த்ருயோகீந்த்ரசரண 97
காந்தோபயந்த்ருயோகீந்த்ர ஸர்வ 98
காவேரீ விரஜா 7
கேஸவாசார்யஸ 77

கு

குருமுகமநதீ 17

கு

குஷ்யதே யஸ்ய 16

ச

சதுர்க்ராமகுலோ 71

ஜ்ஞ

ஜ்ஞானவைராக்யஸம்ப 54
ஜ்ஞானவைராக்யஸம்பூ 68

த

தமேவமத்வா 19
தாப:புண்ட்ர: 40

த

தயாநிக்நம்யதீ 32
த்ருஷ்ட்வா துஷ்டாவ 13
தேவராஜதயாபா 38
தேவாதிதேவ 66
த்ராவிடாகம 48
த்ராவிடாம்நாய 87

ந

நம:பங்கஜநேத்ராய 26
நம:ஸ்ரீரங்கநாயக்யை 9
நம:ஸ்ரீஸைலநாதாய 89
நமஸ்யாம்யரவிந்தாக்ஷம் 25
நமோऽசிந்த்யா 24
நமோவேதாந்த 61
நமோஸ்துதேவரா 72
நாதமௌநி 27
நீளாதுங்கஸ்தந 18

ப

பரகாலஸ்ய 83
பரித்ராணாய 3
பாதுகேயதி 43
பிதாமஹஸ்யாபி 34
பௌத்ரம் ஸ்ரீராம 56
ப்ரபத்யேநிரவ 78

ப

பக்தாம்ருதம்வாஞ்சித 36

பு4க3வத்3பு4க்தி 29
பா4ரத்3வாஜகுலோ 45

ம

மல்லாபுரவரா 12
மாதாபிதா யுவ 15
மாத4வாசார்ய 70
மாலாத4ரகு3ரோ: 49

ய

யதீந்த்3ரக்ருத 58
யத்பதா3ம்போ4ருஹ 30
யதா2வதாராந் 39
யாமுநாசார்ய 37
யோ நித்யம் 42

ர

ரம்யஜாமாத்ரு யோகீ3ந்த்3ரபாத3ரேகா2 92
ரம்யஜாமாத்ரு யோகீ3ந்த்3ரபாத3ஸேவா 93
ராமாநுஜபத3ச்சா2யா 50
ராமாநுஜார்ய ஸச்சி2ஷ்யம்வேத3 53
ராமாநுஜார்ய ஸச்சி2ஷ்யம்ஸாலக்3ராம 46
ராமாநுஜார்ய ஸத்புத்ரம் 63

ல

லக்ஷ்மீகல்ப 8
லோகாசார்யபதா3ம் போ4ஜ 69
லோகாசார்யபதா3ऽऽஸக்த 67
லோகாசார்யாயகு3ரவே 86

வ

வந்தே3வாந 103
வந்தே3ஸ்ரீகோ3புரா 65
வந்தே3ஸ்ரீதே3வதா 65*
வந்தே3ஸ்ரீபுண்ட3ரீ 47
வரத3கு3ரு 102
வாதூ4லாந்வய 64
வேதா3ந்ததே3ஶிக 95
வேதா3ந்தவேத்3யா 62

ஶ

ஶக்திபஞ்சமய 14
ஶட2கோபமுநீ 79
ஶமத3மாதி3கு3ணைக 99
ஶ்ரீக்ருஷ்ணபாத3பாதா3 85
ஶ்ரீகோ3ஷ்ட2பூர்ண 43§
ஶ்ரீபராஶரப4ட்டார்யஶ்ரி 60
ஶ்ரீபராஶரப4ட்டார்ய:ஶ்ரீ 59
ஶ்ரீப4ட்டநாத2 104
ஶ்ரீப4ட்டார்யக்ருபா 57
ஶ்ரீபா4ஷ்யகார 51
ஶ்ரீமத்க்ருஷ்ணஸமா 80
ஶ்ரீமத்க்ருஷ்ணார்ய 82
ஶ்ரீமத்கேஶவ 76
ஶ்ரீமத்3வாதூ4ல 105
ஶ்ரீமத்3வேத3மஹாசார்ய 74
ஶ்ரீமாந்வேங்கட 55
ஶ்ரீமாந்ஸுந்த3ரஜா 90
ஶ்ரீரங்க3கு3ருஸத்புத்ரம் 75
ஶ்ரீரங்க3சந்த்3ரமஸ 10
ஶ்ரீரங்க3மங்க3ளமணிம் 6
ஶ்ரீரங்கே3மீநஹஸ்தே 52
ஶ்ரீராமமிஶ்ரபத3 31
ஶ்ரீலோகஸாரங்க3 20
ஶ்ரீவத்ஸசிஹ்நமி 43†
ஶ்ரீவல்லப4பதா3ம்போ4ஜ 35
ஶ்ரீஶைலபூர்ண 44
ஶ்ரீஶைலேஶ த3யா 91
ஶ்ருத்யர்த்த2ஸார 81

ஸ

ஸகலவேதா3ந்த 94
ஸுந்த3ரஜாமாத்ரு 84
ஸௌம்யஜாமாத்ரு....சர 96
ஸௌம்யஜாமாத்ரு... பாத3 100
ஸ்பு2ரத்கிரீடா 1
ஸ்வயமாஹூய 88
ஸ்வாவதாரஸ்த2லே 43*
ஸ்வோசிதவி 2

ஹ

ஹஸ்தஸ்த2தால 23

acharya.org